திராவிடநாடு

19—8—62 | வார வெளியீடு | விலை 16 காசு

"சாய்ந்திடும் அறிகுறி தெரிகிறது!"

—[ப. வரதராசன்]—

சாய்ந்திடும் அறிகுறி தெரிகிறது—தம்பி
சரித்திர நிகழ்ச்சி நடக்கிறது
ஆத்திரம் ஆட்சி செய்கிறது—தம்பி
அடிக்க உதைக்க முனைகிறது (சாய்ந்திடும்)

ஆத்திரம் நமக்கும் பிறக்கிறது—தம்பி
தலைவரின் அறிவுரை தடுக்கிறது
தாக்கிய கரங்கள் களைக்கிறது—தம்பி
தாங்கிய உடலகம் வலுக்கிறது (சாய்ந்திடும்)

தாழ்ந்த பிண்டங்கள் சிரிக்கின்றன—தம்பி
வாழ்ந்திட அறிவினை இழக்கிறது
கூட்டத்தில் கோவிந்தம் இசைக்கிறது—தம்பி
கொடுமைக்குத் துணையாய் நிற்கிறது (சாய்ந்திடும்)

நல்லவர் உள்ளம் கொதிக்கிறது—தம்பி
நமக்கு மேலாய்த் துடிக்கிறது
அன்னையர் நெஞ்சம் வெடிக்கிறது—தம்பி
அனலெனச் சொற்களை உதிர்க்கிறது (சாய்ந்திடும்)

உலகம் ஓர்ந்து பார்க்கிறது—தம்பி
உண்மையை நாடி வருகிறது
விலங்கினம் நடத்தும் தர்பாரில்—தம்பி
விவேகம் ஏது என்கிறது (சாய்ந்திடும்)

'நினைப்பது தவறு'

—[ம. சச்சிதானந்தம்]—

நகர்ந்த புகைவண்டியில் நான் ஏறினேன். ஏறிய நான் கதவு ஓரத்திலேயே நின்றுகொண்டு வெளியுலகைக் கண்டு மகிழ்ந்தேன். அப்பொழுது 'ஐயோ!' என்ற ஒலி எழுந்து என் காதுகளில் எதிரொலித்திட, திடுக்கிட்டுத் திரும்பினேன். திரும்பிய நான் காலியாகக் கிடந்த அந்தப் பெட்டியில் ஒரு பெண்ணை நோக்கி ஒரு காமுகன் நெருங்குவதைக் கண்டேன். அவள்தான் அலறியிருக்கவேண்டும். விரைந்து சென்று அவனைத் தாக்கினேன். எதிர்பாராது விழுந்த அடியினால் அவன் சுருண்டு கீழே விழுந்தான். நான் என் பலம் கொண்ட மட்டும்தாக்கினேன், 'வரட்டும் அடுத்த புகை வண்டி நிலையம்; உன்னைக் காவலரிடம் ஒப்படைக்கிறேன்' என்று நான் உறுமினேன். அவன் பயத்தால் குறுகி நின்றான்! 'வேண்டாம்! விட்டுவிடுங்கள்' என்றாள் அவள். நான் அவளை நிமிர்ந்து அப்பொழுதுதான் பார்த்தேன். அமைதியான எழில் தோற்றம்! 'ஏன் காமுகர்கள் பெருகிவிடவா?' என்றேன்! சிறையிலேயே அடைத்துச் சித்திரவதை செய்வதினால் குற்றவாளிகள் திருந்திவிடுவார்களா? திருந்துவது உண்மையானால் குற்றம் குறைந்திருக்க வேண்டுமே? குறைவில்லையே! ஏன்? 'விட்டுவிட்டால் திருந்திவிடுவார்களா? 'நம்முடைய தங்கையை ஒரு காமுகன் நம்மைப்போல் கற்பழிக்க முனைந்தால் நமக்கு எப்படி இருக்கும் என்று கற்பழிக்க முனையும் இவர்களைப் போன்ற வெறிக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டு விட்டவர்கள் நினைக்கவேண்டும்! நினைத்திட வழி வகுத்திடவேண்டும்! திருடனும் மனிதனே! அவன் ஏன் திருடுகிறான்? வறுமை! அதனை ஒழித்திட முனையவேண்டுமேதவிர, திருடனைச் சிறையிலே பூட்டிவிடுவதால் பயனில்லை! குற்றம் செய்பவர்கள் அவர்கள் தாங்கள் செய்கின்ற குற்றத்தை உணரவேண்டும். உணராதவரை குற்றம் செய்பவர்கள் குறையப் போவதில்லை.

"நண்பரே! உங்களை இவர் அடிக்க நேர்ந்தமைக்கு வருந்துகின்றேன்." நான் திகைத்து நின்றேன். கற்பழிக்க வந்த காமுகனை நோக்கிக் குமுறவேண்டியவள் குமுறாமல், அமைதியோடு மன்னித்து, அறிவுரை நல்குகின்றாளே! இவளன்றோ பெண்! என் இதயம் இப்படி நினைத்தது. அவன் கண்கள் கண்ணீரைப் பொழிந்தன! 'சகோதரி என்னை மன்னித்துவிடம்மா!' என்று கூறிக்கொண்டே அவள் கால்களில் அவன் விழுந்தான். அவள் 'எழுந்திருங்கள்!' என்றாள்.

அவன் எழுந்து இருவரிடமும் இருகரம் கூப்பி விடை பெற்றுக் கொண்டு சென்றான். அவன் சென்றபின் 'நான் பார்த்திருக்கிறேன், பலப் பாவையரை! அவர்கள் எல்லாம் படித்துவிட்டோம் என்று செருக்கோடு உலவுகிறார்களே தவிர, படித்தமைக்கு ஏற்பப் பண்போடு உலவுகிறார்களில்லை! இன்று நான் சந்திக்கிறேன் படித்தவள் என்கின்ற பண்பு திகழ, தன் அன்பு மொழிகளால், குற்றவாளியே திருந்திக் கண்ணீரைச் சிந்திடச் செய்தப் பாவையினை! குழந்தைகளை, குற்றவாளிகளை அடிப்பதில் பயனில்லை! அன்பால் முடியாதது ஒன்றுமில்லை என்று நிரூபித்துவிட்டாய்! பெண்மையின் இலக்கணமே! நீ வாழ்க! உன் பெருந்தன்மை வாழ்க!' என்று புகழ்ந்தேன்.

அவள் 'உங்களது உதவிக்கு என் இதயங்கனிந்த நன்றி!' என்றாள். தன் இதழ்களில் புன்னகை தவழ!

உங்கள் பெயர்? 'அல்லி' அழகானபெயர். உங்கள் பெயர்? 'ஆனந்தன்! திருவாரூருக்கு அருகே உள்ள சேந்தமங்கலத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன்' 'நானும் நல்லபலகலைஞரை பெற்றெடுத்துத்தந்து பெருமைகொண்ட, கலைத்திகழ் ஆரூரே! தெற்கு வீதியில் உள்ள அறிவழகனார் இல்லத்தில் உள்ள பேராசிரியர் அறிவழகனாரின் மகள் நான்! தற்பொழுது ஆரம்பப்பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறேன்!'

'ஆசிரியரைப்பற்றி சிலர் கேவலமாகப் பேசுகிறார்களே!' 'இளைய உள்ளங்களில் அறிவுபுகட்டி அவர்களை அறிவுப் பாசறைக்கு வழியனுப்பிவைப்பவர்களே அவர்கள் தானே! சுருங்கச்சொன்னால் வருங்காலச் சமுதாயம் வாழ்வதும், அழிவதும் அவர்கள்கையில்!' பின்னும் நாங்கள் ஏதேதோ பேசினோம்! 'என்னோடு எங்கள் இல்லம் வருகிறீர்களா?' என்றாள். 'இல்லை! பின்னர் வருகிறேன்' என்று கூறிவிட்டு அவளிடமிருந்து விடைபெற்றேன். இருவரும் பிரிந்தோம். அவள் என்னை விட்டுப் பிரிந்து சென்றாளே தவிர, அவள் உருவம் என் இதயத்திலேயே நின்றுகொண்டு கண்களில் அன்புமொழிய வருக! வருக! என வரவேற்று என்னை அறிவுலகம் நோக்கி அழைத்தது!

நாட்கள் நகர்ந்துசென்றன. நான் ஒருநாள் அவள் இல்லத்திற்குச் சென்றேன். அவளும் அவள் தந்தையும் இருகரம்கூப்பி அன்பொழுக வருக! வருக! என வரவேற்றார்கள். நானும் அவர்களுக்குப் பதில் வணக்கம் செலுத்திவிட்டுப் பக்கத்தில் அமர்ந்தேன். அவர், அல்லியின் தந்தை 'உங்களைப்பற்றி நிறையக் கூறினாள். உங்களது உதவிக்கு, பாதிக்கப்பட இருந்தவளின் தகப்பன் என்ற உரிமையில் நன்றி செலுத்துகின்றேன்!' 'உதவி செய்வது மனிதனின் கடமை! அதற்கு மனிதன் நன்றியை எதிர்பார்ப்பது சரியன்று!' 'நான் என் கடமையைச் செய்தேன்.' மிக்க நன்றி— என்று கூறி விடைபெற்றுக் கொண்டேன்.

பிறகு, காலம் வாய்க்கும்போதெல்லாம் இருவரும் சந்தித்துச் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள புண்களை ஆற்றும் வழிகளைப்பற்றி உரையாடல்கள் நடத்துவோம்.

இருவரும் உடன் பிறந்தவர்கள் போன்று பழகிப், பிறர்நலம்பேணும் பெருந்தொண்டினை இயன்றவரை செய்து வருகின்றோம்.

நல்ல தீர்ப்பு

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (19—8—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 51

"இனித் தீர்ப்புக்கூற வேண்டியது மக்கள் மன்றமேதான். மகேசனின் தீர்ப்பை மாற்றியமைக்கும் வல்லமை பொருந்தியது மக்கள் மன்றமேதான்" என்று சென்ற கிழமை இந்தப் பகுதியில் நாம் குறிப்பிட்டு இன்றைய் தமிழகக் காங்கிரசு ஆட்சியின் அடக்கு முறைக் கொடுமையினை எடுத்துக் கூறியிருந்தோம்.

மக்கள் தங்களுக்குக் கிட்டிய சந்தர்ப்பத்தினைச் சரியானபடி பயன்படுத்திக்கொண்டுவிட்டனர். நல்ல தீர்ப்பு வழங்கிவிட்டனர். ஆமாம், திருச்செங்கோட்டில் சென்ற கிழமை நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பாராளும் தகுதிபடைத்தோர் யார் என்பதைக் கூறிவிட்டனர். காங்கிரசு ஆட்சியெனும் சர்வாதிகார ஆட்சிக்கு இதோ சாவுமணி அடிக்கிறோம் என்று வாயால்சொன்னதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் செயலாலும் செய்துகாட்டிவிட்டனர்.

திருச்செங்கோடு பாராளுமன்றத் தேர்தலில் ஏற்படும் தோல்வி — ஒருகால் அப்படி ஏற்பட்டிருந்தால்— அது திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த வகையிலும் பாதிக்கக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கவில்லை. இது நடுநிலை நோக்குக்கொண்டார் அனைவரும் தெள்ளெனத் தெரிந்திருந்த உண்மை.

கழகத்தின் முன்னணித் தலைவர்கள் அத்தனை பேரும்; தொண்டர் கூட்டம் அவ்வளவும்—மக்கள் நலம் கோரியதன் முன்னிலையாக — காங்கிரசு ஆட்சியால் சிறைக்கோட்டத்தில் அடைக்கப்பட்டுக்கிடக்கும் இந்த வேளை நடத்தப்பட்ட தேர்தலாகும் அது.

இந்தத் தேர்தலிலும், வருகின்ற நகரமன்றத் தேர்தல்களிலும் கழகம் எய்தவிருக்கும் பெருவெற்றியினைப் பெறவொட்டாமற் செய்யவேண்டும்; கழகத்தை முறியடித்துக் காணவேண்டும் என்று திட்டம் வகுத்தது காங்கிரசு அரசு.

அந்தத் திட்டத்தின் வழியே கழகம் ஏழையர் துயர் துடைப்பதற்கென ஈடுபட்ட அறவழி மறியலைப் பயன்படுத்திக்கொண்டு, காங்கிரசு அரசு கழகத்தவரைப் பல்லாயிரக்கணக்கில் சிறைக்குள் தள்ளப்பார்த்தது. தள்ளியிருக்கிறது.

எனினும் மக்கள் இந்தச் சர்வாதிகார ஆட்சியினை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்! ஏற்றுக்கொண்டுவிடமாட்டோம் என்று கூறவேண்டிய தங்கள் கருத்தினை ஏற்ற சமயம் பார்த்து, ஏற்ற பெற்றியிற் கூறிக் காட்டிவிட்டனர்.

இந்தத் தேர்தலில் எவ்வாறேனும் வெற்றியை ஈட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காக—கழகத்தின் தலைவர்கள் அவ்வளவுபேரையும் சிறையில் தள்ளியது போதாது என்று — தமிழக அரசின் சின்ன மந்திரிகள், பெரிய மந்திரிகள் உட்பட அத்தனை அமைச்சர்களும் திங்கள் ஒன்றுக்கு முன்னிருந்தே திருச்செங்கோடு பாராளுமன்றத் தொகுதியிற் பாடியிறங்கியிருந்தனர். செல்லுமிடங்களில் எல்லாம் கழகத்தைப்பற்றி நேர்மையற்ற அவதூறு வார்த்தைகளையே கூறிக்கூறி அவர் தூற்றிக்கொண்டுவந்தனர். தங்கள் அதிகாரபலம் அவ்வளவையும் காட்டினர். தங்கள் அதிகார இயந்திரம் அவ்வளவையும் பயன்படுத்தினர். அதிலும் தில்லி இரும்பு மந்திரியாகிவிட்ட கனம் சுப்பிரமணியம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இல்லாத செய்திகளை எல்லாம் இட்டுக்கட்டி எடுத்துச்சொல்லி ஓட்டு வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாராம்! 'முன்னேற்றக் கழகத்திற்குப் போடும் ஓட்டு பிரிவினையை ஆதரிக்கும் ஓட்டு, முன்னேற்றக் கழகத்திற்குப் போடும் ஓட்டு தேசிய ஒருமைப்பாட்டினைக் குலைக்கும் ஓட்டு' என்று அவர் வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக் கொண்டேதான் ஓட்டு வேட்டையாடியிருக்கிறார்! பாவம், திருச்செங்கோடு மக்கள் இரும்புமந்திரியின் முகத்திற் கரிபூசிஅனுப்பிவிட்டனர். 'எங்கள் ஓட்டு பிரிவினைக்கே—விடுதலைக்கே' என்று செயல் பூர்வமாகச் செய்துகாட்டிவிட்டனர்! காமராசரின் சர்வாதிகாரப் போக்குக்கும் சரியான பதிலடி கொடுத்துவிட்டனர்.

சில தினங்களுக்கு முன்னே அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் 'திராவிட முன்னேற்றக் கழகத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் பதவிகளிலிருந்து விலகிக்கொண்டு மறுதேர்தலில்நிற்கவேண்டும்' என்று சவால்விட்டுக் கூறியிருந்தார். அந்தச் சவாலுக்குப் பதில்சொல்ல வேண்டுவோர் எல்லாரும் சிறையிலிருந்தார்கள். இருக்கிறார்கள். அதனால் அப்போதே தக்கபதிலை அமைச்சர் அவர்கள் பெறவில்லை. ஆனால் திருச்செங்கோடு மக்கள் அந்தச் சவாலுக்குத் தக்க பதிலைக் கைக்கு மெய்யாக எடுத்துக்கூறிவிட்டார்கள். தென்னகத்து மாந்தரின் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மறு தேர்தலில் நின்றால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதை விளக்கமுற எடுத்துக்காட்டிவிட்டார்கள்!

இனிமேலாயினும்—தன் ஆணவத்தின் அழிவைப் பார்த்த பிறகாவது காங்கிரசு அரசு மக்களாட்சிப் பண்பின்படி நடந்துகொள்ள முன்வருமா? அடக்குமுறைக் கொடுமையால் எதையும் சாதித்துக்கொண்டுவிடமுடியும், சூழ்ச்சியையும், அதிகார பலத்தையும் கொண்டு மக்கள் உள்ளத்தைத் தப்புவழியில் திருப்பிவிடமுடியும் என்று எண்ணுவதிலிருந்து விடுபட்டுவருமா? மக்கள் நன்மையைக் கருத்திற்கொண்டு செயல்பட முன்வருமா? இன்னும் பொறுப்போம்! பொறுத்திருந்து பார்ப்போம்!

கடும்புலி வாழும் காடு

—[ப. தா. செல்வன், பி. ஏ.]—

அந்தச் சிறப்பான நகரில் அது ஒரு பெரிய உணவு விடுதி. அலங்காரமான கூடத்தில் ஆடம்பர உடையணிந்து அணி அணியாகப் பணியாட்கள் ஓடிக்கொண்டிருக்க, சீமாட்டிகளும் சீமான்களும் கல கலப்போடு தங்கள் களிப்பின் எல்லையினைக் காட்டிக்கொண்டிருக்கும் மாலை வேளை. கடைக்காரச் சீமானே சிரிப்போடு முகப்பில் அமர்ந்திருக்கிறார், தன் விடுதியின் எல்லையை மனக்கண்ணால்எடைபோட்டவாறு. அப்போது நால்வர், சாமானியர், நம்போன்று சாதாரண உடையணிந்தோர், உணவுண்ண உள்ளே நுழைகின்றனர். பகட்டான ஆடைமுன் பருத்தியாடைக்குத் தரப்படும் மரியாதையுடன் அந்நால்வர் உள்ளே அழைக்கப்படுகின்றனர். அவர்கள் உண்ண, அவர்கள் விரும்பிய சிற்றுண்டிகளே பரிமாறப்படுகின்றன. வந்தவர்கள் விஞ்ஞானிகள் போலும், உணவின் ஒவ்வொரு கூறினையும் எடைபோடுகிறார்கள். அலசுகின்றனர்! பின் ஏதோ தங்கள் குறிப்பேட்டினில் எழுதிக்கொள்ளுகின்றனர். உண்ட உணவுக்குரிய கட்டணத்தைச் செலுத்திவிட்டு வெளியேறுகின்றனர். பல்லாயிரக் கணக்கானவர்களைப் பார்த்துப் பார்த்து உடல் பூரித்துச் சலித்துப் போன கடையதிபருக்கு, இந் நால்வரைப்பற்றி அறிந்திடும் அவசியம் இல்லைத்தான். ஆனால், போன நால்வர் இவ்விடுதியினை உடனே மறந்தனர் இல்லை! சரியாக 60 நிமிடங்கள் கழித்து மீண்டும் அதே விடுதிக்குள் நுழைகின்றனர். ஆ! உள்ள படியே தேனீர் என்றால் இங்கேதான் அருந்தவேண்டும்! சிற்றுண்டியா? மற்றவர்களும் கற்றுக்கொள்ள வேண்டும், இவர்களிடமிருந்து! உணவு வகைகளா? புதிது புதிதாய் உண்டாக்குகிறார்களய்யா இங்கே, என்ற எண்ணம்தான் தோன்றியதோ என்னவோ, அந்நால்வர் மீண்டும் நுழைகின்றனர். என்னே இந்தப் பாழும் நாவின் ஆசை. முன்பு உண்ட அதே உணவினை அதே அளவினில் அதே வகையினில் அல்லவா நாடுகின்றது! பளபளப்பான தட்டுகளில் மீண்டும் அவைகள் படையெடுக்கின்றன. இந்த நால்வரும் கண்ணை மூடிக் கொண்டு வயிற்றில் கட்டியிருக்கக் கூடாதோ. இல்லை இல்லை! இம்முறையும் முன்முறை போன்றே உணவு வகையினை ஆராய்கின்றனர். என்ன வண்ணம்! என்ன வகை! என்றவாறு, பிறகு அவற்றினையும் குறிப்பேட்டினில் குறித்துக்கொண்டு முகப்பினில் அமர்ந்துள்ள முதலாளியிடம் வருகின்றனர்!

"ஐயா! தாங்கள்தான் இந்தப் பெருமைமிக்க உணவு விடுதியின் அதிபரோ!—பெருமையுடன் சிரிப்புக் காட்டுகிறார் அதிபர். உடனே அந் நால்வரில் ஒருவர், தான் தொலைபேசியில் பேச அனுமதி வேண்டுகிறார்! அளிக்கப்படுகிறது. சிறிதுநேரம் ஏதோ மற்றவர்களுக்குப் புரியாத மொழியில் எவரோடோ பேசுகிறார். பணிவன்பான வணக்கத்தினையும், பண்டத்திற்கான காசினையும் அளித்துவிட்டு இந் நால்வரும் வெளியே வந்துவிடுகின்றனர். பத்து நிமிடங்கள் பறக்கின்றன! அந்தக் கூடத்தில் உள்ள மற்றவர்களுக்கோ அந்தப் பத்து நிமிடங்கள் பறந்து சென்றவண்ணமே தெரியவில்லை. கடை முதலாளிக்கோ ஒரு நிமிடத்தில் பறந்து உயரும் இலாபக் கணக்கு எத்தனையென்று மூளை வேலை செய்துகொண்டுள்ளது! அப்பொழுதுவெளியே, தேனீர்அருந்தத் தான்போலும் ஒரு நீல நிறக் காவலர் நிலைய வண்டி வந்து நிற்கிறது. அதனின்று 10, 12 பேர் காவலர்கள் இறங்குகின்றனர். வழக்கம் போலவே மாறாத அந்தப் புன்னகையுடன் தன் விடுதியினை நாடிவந்த போலீசாரை வரவேற்கிறார் அதிபர். ஆனால், வந்தவர்களோ, சட்டென்று கைவிலங்கினை மாட்டுகின்றனர். அதிபருக்கோ அதிர்ச்சி. பணியாட்களுக்கு மிரட்சி! அந்நால்வருக்கோ மகிழ்ச்சி!

தோழர்களே! இந்நிகழ்ச்சி ஏதோ நாடகம்போன்றுஉள்ளதுஅல்லவா? இன்னும் தொடருங்கள். மக்கள் உண்ணும் உணவுப்பண்டத்தில், கலப்படம்செய்து அதே விலைக்கு விற்று பொதுமக்களையும், அரசாங்கத்தையும் ஏமாற்றுகிறான் இந்த எத்தன் என்பதை எடுத்துக்காட்ட அரசினரால் ஏவப்பட்ட இரகசியப் படையினர் உள்ளே நுழைந்து உண்மையினைக் கண்டு, அவனை வெளியுலகத்திற்குக் காட்டி, வழக்குத் தொடுத்து 14 ஆண்டுகள் கடுஞ்சிறை வாசமும் அளித்துள்ளனர். இப்படி ஒரு உலுத்தனைத் தண்டித்தால், மற்றவர்கள் அஞ்சுவார்கள். இனிமேல் நல்லமுறையில் நாவுக்கு உணவுப்பண்டம் கிட்டும் என்ற நிலையினை ஏற்படுத்திவிட்டனர்.

இதுதான், மேலே நாம் கண்ட நிகழ்ச்சி.

எங்கே நடந்தது? எந்தக் கண்டத்தில்? எந்த நாட்டினில்? எந்த ஆண்டில்? உள்ளபடியே நிகழ்ந்ததா? அல்லது உண்டாக்கிய கற்பனையா? — இப்படியும் நடந்திருக்குமா...இவ்வாறு நாட்டின் நலன் கருதி, நஞ்சு கலக்கும் நாசகாலரைப் பிடிக்கப் போலீசுப் படையினை ஏவி, அஞ்சா நெஞ்சுடன் அரசமைக்கப்பட்ட நாடு எது? சமுகத்திற்குக் கேடிழைக்கும் சழக்கர்களை மக்களின் பொருட்செல்வத்தை அநியாயமாக உறிஞ்சும் புல்லுருவிகளை, கள்ளச் சந்தையினரைக் கைவிலங்கிட்டுச் செல்லும் அரசு எங்குள்ளது என்றெல்லாம் அறிய உங்கள் உள்ளம் விழைகின்றதல்லவா?

இந்நிகழ்ச்சி நடந்த இடம் கராச்சி காலம் 1961.

ஆனால், இங்கு ஜனநாயகம் மலர்ந்து, செழித்துப், பொங்கிப், பூரித்துக் கரைபுரண்டு ஓடுகிறது என்று சொல்லப்படுகிறது. எல்லோரும் ஓரினம்! எல்லோரும் சுய உரிமை படைத்தவரே! ஆள்வோர் மாள்வோரில்லை! அடிமை, ஆசான் இல்லையென்ற கீதம் பாடப்படுகிறது. மற்ற அரசுகளைக் காட்டிலும் உரிமைகளை மக்களுக்கு வாரி வாரி வழங்கிய வண்ணமுள்ள அரசு என வர்ணிக்கப்படுகிறது. ஆனால் நாளுக்கு நாள் வரிகள்மேல் வரிகளோ ஏறிக்கொண்டே போகின்றன. ஆளுங்கட்சியை அர்ச்சனை செய்திடும்நாளிதழ்கள்கூடக்கேலிச் சித்திரங்கள் போட்டு ஏழைபடும் அவதியினையும், அவற்றால் ஏற்றம்

(16-ம் பக்கம் பார்க்க)

ஆர்ப்பாடி

ஆர்ப்பாட் ஆர்ப்பாடி அவன் பெயர். அவன் ஒரு சாதாரண இப்னுட்டிச வித்தைக்காரன். அந்த வித்தையை அவன் பெரிய பிரயாசையோடுதான் கற்றுத் தெரிந்துகொண்டிருந்தான். அப்படிக் கற்றுத் தெரிந்துகொண்டிருந்த அந்த வித்தையைக்கொண்டுஅவன் யாரையும் வசியம் செய்ய முனையவில்லை. எந்தச் சதி வேலைக்கும் அதனை அவன் பயன்படுத்தவில்லை. ஆமாம், சதியென்றுல் அறியாதவன் அவன். கற்றிருந்த அந்த இப்னுடிசம் அவன் வயிற்றுப்பாட்டிற்கு வழி காட்டிற்று.

சிறியதொருஅரங்கத்தில் சுற்றிலுமிருந்து மின்விளக்குகள் ஒளி பாய்ச்ச நடுவே நின்றுகொண்டிருந்தான் ஆர்ப்பாட் ஆர்ப்பாடி. அவன் எதிரே அழகிய பெண்ணொருத்தி. 'இதோ இந்த வைடூரியத்தைப் பார்' என்றுன் அவன் தான் கட்டிக்கொண்டிருந்த தலைப்பாவில் ஒட்டிக்கொண்டிருந்த வெறும் கண்ணுடித் துண்டினை எதிரிலிருந்த பெண்ணிடம் சுட்டிக்காட்டி.

"சும்மா இந்த வைடூரியத்தைப் பார். உடனே நீ இப்படியும், அப்படியும் உன்னையறியாமல் ஊசலாடத் துவங்குவதைச் சற்றே உணரலாம்"

அந்தப் பெண் ஆர்ப்பாட் ஆர்ப்பாடி சுட்டிக்காட்டிய கண்ணுடித் துண்டில் பார்வையைப் பதித்தாள். உடனே இப்படியும் அப்படியும் அவள் அசைந்து ஊசலாடத் தொடங்கிவிட்டாள்.

"அப்படித்தான்" என்றுன் ஆர்ப்பாடி மெல்லிய குரலில். "இப்போது நீ மிகவும் இலாவகமாகஅசைகிருய், நீருக்குள்ளே மீனொன்று மெல்லெலன நீந்திவருவதுபோல்.

"உண்மையில் நீ ஒரு மீன் இனத்தாள்தான்."

அந்தப் பெண் தன் உதடுகளை விதவிதமாக நெளித்துச் சுழித்து மூடி மடக்கிப் பல்வேறுஅபிநயங்கள் காட்டினுள். ஒரு மீனைப்போலவே அவள் இப்போது காட்சியளித்தாள் சுற்றிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

கர்னல் ஆகஸ்டு வான் ஸ்ட்ரக்கல் என்பானும் அந்த வேளை வேடிக்கை பார்ப்போரில் ஒருவனுக அங்கே அமர்ந்திருந்தான். சுற்றிலுமிருப்போர் கைதட்டி ஆரவாரம் செய்யும்போது அவன் மட்டும் அங்கே சும்மா உட்கார்ந்திருக்கலாமா!— பெர்லினில் இதைவிட எத்தனையோ மடங்கு மேலான இப்னுட்டிச வேடிக்கைகளை அவன் கண்டுகளித்திருந்தாலும், இங்கே ஒப்புக்காக அவன் கைதட்டவும், பாராட்டவும் வேண்டித்தானிருந்தது.

இந்தக் கதை முழுக்க முழுக்கக் கற்பனைக் கதை. எனினும் கடந்த இரண்டாம் உலகப் பெரும் போர்க் காலத்தே நாசிகள் எனப்பட்ட இட்லரீய செர்மானியர் நிகழ்த்தி முடித்த கொடிய வன்செயல்களிலும், அடக்குமுறைகளிலுமிருந்து ஒரு சிறு துண்டை எடுத்து, அதனைப் பின்னணியாக வைத்துக்கொண்டு இதனைப் பின்னியிருக்கிறுர் இதன் மூல ஆசிரியர் ஆண்ட்ருமெய்செல்ஸ் என்பார்.

இப்போது நடைபெறுகின்ற அடக்குமுறைக் கொடுமைகளைப் பார்க்கும்போது நாசிசமும், இட்லரிசமும் மாயவில்லை, மறையவில்லை என்பது ஒருபுறம் மக்கள் உள்ளத்தே பதிந்துகொண்டிருக்கும் அதே வேளை இந்தக் கற்பனைக் கொடுமை அற்பக் கொடுமை என்றும் தென்படக் கூடும்; தென்படுகின்றது. இதுபற்றித்தான் நூலோர்கள் சொல்லியுள்ளார்கள் போலும் 'உண்மை கற்பனையைவிட விந்தை வாய்ந்தது கொடுமை நிறைந்தது' என்று.

எனினும் நடைமுறை அடக்குமுறைகளையும் கற்பனையையும் ஒத்திட்டுப் பார்க்க இந்தக் கதை பயன்படும் என்பது எம் உள்ளக் கிடக்கை.

—கூ. இராசன்.

வேடிக்கைகள்முடிந்தன. விளக்குகள் ஏற்றப்பட்டன. அந்தப் பெரிய மண்டபத்தின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த தன்னுடைய நாசி—ஒற்றர் மூவரைப் பார்த்து ஸ்டரக்கல் ஏதோ கைசாடை காட்டினுன்.

உடனே அந்த மூவரும் எழுந்தனர். ஆர்ப்பாடியின் தனியறையை நோக்கி நடந்தனர். அங்கே அவர்கள் அவனிடம் அடக்கமாகப் பேச்சுக் கொடுத்தார்கள். அந்தப் பேச்சு உறுதியாகவுமிருந்தது "எங்கள் கெஸ்டபோ தலைமை நிலையத்துக்கு நீங்கள் வரவேண்டும். அங்கே உங்கள் வேடிக்கைகளை நாங்கள் கண்டு களிக்கவேண்டும்" என்று அழைப்பு விடுத்தார்கள் அவர்கள்.

ஆர்ப்பாடிக்கு நன்ருகத் தெரியும் அப்படிப்பட்ட அழைப்புகளை மறுதலிக்கக்கூடாது என்று. அவன் தன்னுல் முடிந்தமட்டும் அமைதியைச் சேர்த்துத் திரட்டிக்கொண்டான். முகத்தை அலம்பினுன். வேடங்களையெல்லாம் கலைத்துக் கொண்டான். ஒற்றர்கள் பின்னுல் கிளம்பினுன்.

'அண்ட்ராசி அட் — அறுபதாம் எண் எனப் பெயர் பெற்ற அந்தப் பெரிய, மங்கிய தோற்றமுடைய கட்டிடத்திற்குள் நுழைவோர் நம்பிக்கையென்ற ஒன்றைத் தம்முடன் கொண்டுசெல்லவே முடியாது.

அங்கேரியர் எனப்பட்டோர் பல்லோர் அங்கே அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றனர். ஆர்ப்பாடி அதனை நன்கறிவான்.

உதடுகளை இறுக மூடிக்கொண்டு நடந்த ஒற்றர்கள் ஆர்ப்பாடியை அந்தக் கட்டிடத்தின் மேல்மாடிக்கு அழைத்துச் சென்றனர். அங்கே இரண்டு பெரிய மரக்கதவுகளைக் கடந்து சென்றனர். அங்கே ஓர் அறை. தரையில் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதுவே அலுவலகம். அந்த அலுவலகத்தின் ஒரு கோடியில் பெரியதொரு மேசைக்கெதிரே கர்னல் வான் ஸ்ட்ரக்கல் அமர்ந்திருந்தான்.

அங்கே அந்த அங்கேரியன்— ஆர்ப்பாட் ஆர்ப்பாடி — நின்றுகொண்டிருந்தான். நின்றபொழுது சிறிதெனினும் அது பலமணி நேரத்தைப்போல் அவனுக்குத் தென்பட்டது. அவன் உள்ளத்தில் பேரச்சமும், சிறு நம்பிக்கையும் ஒன்றையொன்று இடித்துப் பிடித்து நெட்

டித் தள்ளிக்கொண்டுஅலேமோதின அவன் வான் ஸ்ட்ரக்கலேப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருன். கேள்விப் பட்ட அளவில் சிறிதுகூட நல்லதாக ஒன்றுமில்லே.

கடைசியாக அந்தக் கர்னல் நிமிர்ந்து பார்த்தான்—கையிலிருந்த காகிதத்தை மேசைமீது வைத்து விட்டு, அப்போதுதான் ஆர்ப்பாடி யைப் பார்ப்பதுபோல் அவன்உற்று நோக்கினுன். வாய் வார்த்தையில் லாமலே ஆர்ப்பாடியிடம் அவன் நாற்காலியொன்றைச் சுட்டிக்காட் டினுன். அதே சமயம் அவன் தன் இருக்கையினின்று எழுந்து கொண்டுவிட்டான். இப்படியும் அப்படியும் நடந்தான். கையிலிருந்த குதிரைச் சாட்டையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். சட்டென்று நின்ருன்.

"ஹெர் ஆர்ப்பாடி, நான் நேரடி யாகச் சொல்லவேண்டிய செய் திக்கே வர விரும்புகிறேன். நீ எதிரி களோடுசேர்ந்துகொண்டிருக்கிருய்; உன்னுடைய மேடைத் தந்திரங்களே யெல்லாம் பயன்படுத்தி எங்கள் ஆட்களிடம் செய்திகள் சேகரம் செய்திருக்கிருய்! இந்தச் செய்தி களே நீ நேச நாட்டவர்க்கு உரிய வழி அனுப்பியுமிருக்கிருய்!

ஆர்ப்பாடி சிறுநகை புரிந்தான். "இந்தச் செய்திகள் எல்லாம் உங் களுக்கு எங்கிருந்து கிடைத்தன?"

"ஓ, அதை நீ தெரிந்துகொள்ள வேண்டுமா? உன்னுடைய இப்னுட் டிச வேலேயை நீ காட்டிக்கொண் டிருந்தாயே, அப்போது நீ மதாம் லெபட்சரிடம் என்னென்ன கேள்விகள் கேட்டாய் நினேவிருக் கிறதா— சென்ற கிழமை?" என் ருன் அந்த ஜெர்மானியன்.

"ஓ" என்று நெட்டுயிர்ப்பு விட் டான் ஆர்ப்பாடி. அவன் முகத்தி னின்று புன்னகை மறைந்தது. "அது சாதாரணச் செய்தி. என் போன்ற இப்னுட்டிச வித்தைக்காரர் கள் பயன்படுத்தும் தந்திர வார்த் தைகள்"

"மேலும்" என்று தொடர்ந்தான் அந்தக் கர்னல். "இந்தச் செய்தி களே வைத்துக்கொண்டு நீ என்ன செய்தாய் என்பதை நாங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

"முதலில் உன் உண்மைப் பெயரை நீ வெளியிடவேண்டும். ஆர்ப்பாட் ஆர்ப்பாடி என்பது உன் னுடைய மேடைப் பெயர், அது எனக்கு நன்ருகத் தெரியும்"

"என் உண்மைப் பெயர் டேவிட் கோகன்' அந்தச்ஜெர்மானியன் தன் கையிலிருந்த சாட்டையால் ஆர்ப் பாடியைச் சாடினுன். ஆர்ப்பாடி யின் கரத்தில் அவன் அடித்த அடி விழுந்தது. முதலில் அந்த அடி அந்த இப்னுடிசக்காரனுக்குப் பெரு வேதனேயைத் தந்தது. அவன் தன் உணர்வையெல்லாம் அந்த அடி பட்ட இடத்துக்குக் கொண்டுவந் தான். சட்டென வலி அடங்கிற்று. அவன் தனக்குத்தானே இப்னுடிசம் செய்துகொள்ளும் முறையைக் கற் றிருந்தான். அது உடல் வேதனே யிலிருந்து அவனே விலக்கி வைக் கும் தன்மை பெற்று உதவியது.

"இப்போது நான் சொல்கினே;" என்று தொடர்ந்தான் வான் ஸ்ட்ரக் கல். "உன்னுடைய உண்மைப் பெயர் லாரென்சு மெசாரசு. ஆனுல் அது முக்கியமல்ல. மற்றப் பெயர் கள் தாம் முக்கியம்"

"கர்னல் வான் ஸ்ட்ரக்கல், உம் மால் அந்த மற்றப் பெயர்களே என் னிடமிருந்து பெற முடியாது" என்று அமைதியாகச் சொன்னுன் ஆர்ப்பாடி.

அந்தச் ஜெர்மன் அதிகாரி மேசைக் கெதிரே உட்கார்ந்துகொண்டுவிட் டான். ஆர்ப்பாடியை ஏறிட்டு நோக்கினுன்.

"இப்படிச் சொல்வதில் இங்கே நீ முதல் ஆள் அல்ல ஆர்ப்பாடி. இப் படிக் கேட்பது எனக்கும் இது முதல் தடவை அல்ல ஆர்ப்பாடி. நீயொரு கலேஞன். நான் ஒரு அறிவியல் நிபுணன். உன் விருப்போ வெறுப்போ உனக்கு விளேயாட்டுப் பொருள். அதுவே எனக்கு ஆற் றல் வாய்ந்த ஆயுதம். எல்லா உண்மைக் கலேஞர்களேப் போலவும் நீ இயங்குகிருய்; தனித்து நிற்கின் ருய்!

"நான் இந்த நாட்டின் பெரிய வலி மையை எல்லாம் என் சொந்தமாக் கிக்கொண்டு நிற்கிறேன். உலகத்து எல்லா மாந்தரையும்விட உயர்வு வாய்ந்தவர்கள் உண்டாக்கிக் கண்ட—உலகமே வியந்து, அதிர்ந்து நிற்கும் மிக்க பலம் பொருந்திய இராணுவ இயந்திரத்தின் துணே யோடு நிற்கிறேன்"

"தெரியும். நீங்கள் மேலான மனிதர்கள்" என்ருன் ஆர்ப்பாடி அலட்சியக் குரலில்.

"ஆனுல் நீ அவ்வாறல்ல. உன் விருப்பம் பொடியாக்கப்படவிருக் கிறது என்பதை மறந்துவிடாதே!" என்று கறுவினுன் வான் ஸ்ட்ரக்கல்.

ஆர்ப்பாடி நிலவறையொன்றிற் குள் பிடித்துத் தள்ளப்பட்டான். அந்த அறை சிறியதொரு குழியைப் போன்றது. அரங்கிலிருந்து அவனே அழைத்து வந்த அந்த மூன்று ஒற் றர்கள் தான் அவனேப் பின் தொடர்ந்து வந்தவர்கள்.

அவர்களில் ஒருவன் அந்த அறைக்குள் நுழைந்தான். அலட் சியமும், வெறுப்பும் நிறைந்த பார் வையோடு ஆர்ப்பாடியை அவன் பார்த்துவிட்டு ஓங்கி ஒரு அறை அறைந்தான். அந்த அறை தாங்க மாட்டாது ஆர்ப்பாடி மற்ருெருவன் மீது போய்ச் சரிந்தான். அந்த மற்ற வன் ஆர்ப்பாடியின் அரையில் ஓங்கி யொரு குத்துவிட்டான். பின்னும் அவன் தாடையைப் பார்த்து முழங் காலால் ஓங்கிச் சாடினுன். வலி தாங்க முடியாத நிலேயை அடைந் தான் ஆர்ப்பாடி.

அடுத்து என்ன நடந்தது என் பதை மங்கிய உணர்வோடு, அரை குறையான நினேவோடுதான் ஆர்ப் பாடி அறிந்துகொண்டான்.

எல்லாம் முடிந்த பிறகு நடந்தவற் றைக் கணக்கிட்டுப் பார்த்தான் ஆர்ப்பாடி. நல்ல வேளே எலும்புகள் ஏதும் உடைந்து போகவில்லே. குருதி மட்டும் வாயிலிருந்து வழிந்து கொண்டிருந்தது. அந்தக் குருதி யையும் அவன் தன் உணர்வை ஒன்று திரட்டும் ஆற்றலால் நிறுத் திக் கொள்ள முடிந்தது.

அந்நிலே மாறிவிடும் முகம் அறையால், அடிகளால், கூழாகிப் போயிருந்தது. அந்நிலேமாறிவிடும், காயங்கள் ஆறிவிடும். தலேமயிர் கொத்துக் கொத்தாகப் பறிக்கப் பட்டிருந்தது. அந்நிலே நீடிக்கப் போவதில்லே. தலேமயிர் வளர்ந்து விடும்.

அவனிடமிருந்து கெஸ்டபோவி னர் என்ன தெரிந்துகொள்ளவேண் டுமோ அதை அவன் வெளியிடவே இல்லே. சித்திரவதை புரிவதையே தொழிலாகக்கொண்ட கொடியோர் திரும்பத் திரும்ப அவனிருக்குமிடம் வந்தனர். அவன் உடல் உறுப்பின் ஒவ்வொரு சதைப்பகுதியையும் கிழித்தெடுத்தனர். அடித்தனர். ஒவ்வொரு உறுப்பையும் நசுக்கிப் பிழிந்தனர். ஆனுல் அவன் உறுதி குலேயவில்லே. ஆடாமல், அசையா மல் அந்த உறுதி அப்படியே இருந் தது. வான்ஸ்ட்ரக்கல் தன் வழக்க மான சித்திரவதைகளில் நம்பிக்கை யிழந்தவனுனன். புதுவகைச் சித்திர வதைகளேக் கண்டுபிடிக்கும் வழி யில் முனேந்தான்.

அந்த அறையில் நல்ல ஒளி இருந்தது. அந்த ஒளி ஆர்ப்பாடிக்கு இதத்தையும், வியப்பையும் நல்கியது. அவனைப் பொறுத்தவரையில் வெளிச்சம் நல்லதொருதுணைக் கருவி. அந்த வெளிச்சத்தின் உதவியால் தன் உணர்வு திரட்டும் முறையை அவனால் நன்கு கையாள முடிந்தது. இந்த உண்மை வான்ஸ்ட்ரக்கலுக்குத் தெரியாது.

ஆர்ப்பாடியைத் தூக்கமில்லாதவனாக்கி, அதாவது தூங்குவதிலிருந்து அவனைத் தடுத்து, கலக்கத்துக்குள்ளாக்கி, அவன் உள்ள உரத்தை உடைக்கச்சதி செய்தனர் நாசிகள். அந்தச் சதித் திட்டத்தைப் பார்த்து ஆர்ப்பாடி சிரிக்கத்தான் செய்தான். ஓய்வுத் தன்மையையும் இதமான நிலைமையையும் முன் கூட்டியே ஒன்று திரட்டி வைத்துக்கொள்ளும் கலையினை அவன் நன்கு கற்றிருந்தான். சிறிதளவே தூங்குவதும், பெருமளவு தூங்குதல் இல்லாமல் கழிப்பதும் அவனைப் பொறுத்த வரையில் சற்றும் பிரயாசையற்ற செயல்கள். அவனுடைய இருபதாண்டுப் பயிற்சி இந்த நிலைக்கு அவனைச் சித்தம்செய்து வைத்திருந்தது.

"ஏதாவது ஒன்றைச் சொல்லித் தொலையடா கழுதை!" என்று அந்த நாசிக் கர்னல் கத்தினன்.

ஆனல், ஆர்ப்பாடி எதுவுமே பேசவில்லை. அந்தவேளை அவன் அந்தக் கர்னலை மறந்தான். தான் அடைபட்டுக்கிடக்கும் கொட்டடியை மறந்தான். உலகில் நடந்துகொண்டிருக்கும் பெரும் போரையும் மறந்தான். வேறு ஒன்றைப்பற்றி அதன் ஆழ்ந்த சிந்தனை முயக்கத்திற் கிடந்தான்.

அவன் எலீனுவைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தான். அவளுடைய அழகு, அவளுடன் அவன் வாழ்ந்த வாழ்வு இவை அவன் உள்ளத்துள் திரும்பத்திரும்ப வந்து வந்து போயின. 'அவள் இறந்து போனது எவ்வளவோ நல்லதாகப் போய்விட்டது. உண்மையளவில் நினைப்பதற்கே அது பெருவேதனையும் பேரச்சமும் விளைக்கத்தான் செய்கிறது. எனினும் அவள் இறந்தது நல்லதே! இந்த வகையில் யாரும் அவள் மூலமாக என்னைக் கண்டுகொண்டுவிட முடியாதல்லவா!'

எந்த வகைகொண்டு பார்த்தாலும், முறைகொண்டு பார்த்தாலும் அரசியலில் ஆர்ப்பாடி கருத்துக்கொண்டதே கிடையாது. ஆனல், ஒருவனைப்பற்றி அரசியலே அக்கறை காட்டிக்கொண்டு, கவலைப்பட்டுக்கொண்டு வரும்போது அவனல்தான் என்ன செய்யமுடியும்? ஒருவன், தான் உயிரினும் மேலாகக் காதலித்துக் கொண்டிருக்கின்ற பெண்ணெருத்தி துன்பத்துக்கிலக்காகும்படி நேர்ந்தால், தொல்லைக் குள்ளாகும்படி ஏற்பட்டால்; கடைசியில் அவள் மாற்றுனல் பின்தொடரப்பட்டுக் கொலையே செய்யப்பட்டு விடுவாளேயானல்—அதுவும் அந்த அவல முடிவு அவள் செய்யாத குற்றம் ஒன்றுக்காக, அவள் அறியாத குற்றம் ஒன்றுக்காக, அவளுடைய முன்னேர்கள் இன்றைய ஆதிக்க அரசியலாரின் கருத்துக்கு முரண்பட்டதொரு கருத்தோடு ஒட்டுறவு வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதற்காக நேருமேயானல், அவன் உள்ளம் எப்படிக் கொந்தளிக்கும்? அவன் எதைச்செய்வதற்குத்தான் வீறுகொண்டு எழாமல் இருப்பான்?

"அவன்முகத்தில் ஓங்கி அறை!" என்று கிரீச்சிட்டான் வான்ஸ்ட்ரக்கல்.

அருகில் நின்ற நாசி ஆர்ப்பாடியை நெருங்கினன். கையை மடக்கிக்கொண்டு வலுக்கொண்டமட்டும் அவன் முகத்தில் இரண்டு குத்துகள்விட்டான். அவன் தாடை வழியாக இரத்தம் வழிந்துகொட்டியது.

'ஏதாவது செய்து தீரவேண்டும்' என்று ஆர்ப்பாடி தனக்குள் சொல்லிக்கொண்டான். தன் இப்னுட்டிச வேலையைக் காட்டி, தந்திரத்தை அங்கே பயன்படுத்தி ஏதாவது தகவல் தெரிந்துகொள்ளவேண்டுமென்று முடிவுகட்டினன்.

அவன் காட்டிய சாடை ஸ்ட்ரக்கலுக்கு விளங்கியது. தன் ஒற்றர்களைப் பார்த்து "வெளியே செல்லுங்கள்" என்று உத்தரவிட்டான் அவன்.

ஒற்றர்கள் மூவரும் வெளியேறினர். இப்போது ஆர்ப்பாடியும், வான்ஸ்ட்ரக்கலும் அறைக்குள் இருந்தனர். அந்த அதிகாரி இப்படியும் அப்படியும் அந்த அறைக்குள் சிந்தனையோடு நடைபயின்றன். "உன்னை என்னல் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இவ்வளவு நேரம் தாக்குப்பிடிப்பாய் நீ என்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

"அது உள்ள உறுதியின் பாற்பட்டது கர்னல்!" என்றுன் ஆர்ப்பாடி.

"உன் உள்ள உறுதியை இந்தக் கணமேஎன்னல்தகர்த்தெறிந்துவிட முடியும். சாவுக்கஞ்சி என்னிடம் நீ மன்ருட்டம் போடும்படி செய்துவிட முடியும்" என்று உறுமினன் வான்ஸ்ட்ரக்கல். எதைப்பற்றியோ யோசித்துவிட்டுத் திரும்பவும் பேசினன் அவன்:

"வீணக நீயேன் சாகவேண்டும்? நான் கேட்கின்ற விவரங்களை நீ சொல்லிவிடு. உன்னை நான் விடுதலை செய்து அனுப்பிவிடுகிறேன்"

ஆர்ப்பாடி பெருங்குரல் எடுத்துச் சிரித்தான்.

"கர்னல், விடுதலை என்ரு சொல்கின்றீர்கள்? இங்கு வந்தவர்கள் யாரும் அப்படி விடுதலை பெற்றுச் சென்றதே கிடையாதே — சாவை நோக்கி அவர்கள் எல்லாம் சென்றுவிட்டதைத் தவிர!" "யோசித்து வைத்திரு. மறுபடியும் நானே நான் வருவேன்" என்று கூறிவிட்டுக் கட்டப்பட்டிருந்த ஆர்ப்பாடியின் கரங்களையும், கால்களையும் அவிழ்த்து விட்டுவிட்டுத் தன் வழியே திரும்பினன் வான் ஸ்ட்ரக்கல்.

திடீரென்று தன்னை யாரோ தட்டி எழுப்புவதை உணர்ந்தான் ஆர்ப்பாடி. அவன் தன் கண்களைத் திறந்தான். அவன் எங்கேயிருக்கின்றுன் என்பதை அவன் உணர்ந்து கொள்ள ஒரு கணம் பிடித்தது.

"நீ இருபத்து நாலு மணி நேரம் தூங்கிக்கொண்டிருந்திருக்கின்ருயே! நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாக நீ களைப்படைந்துவிட்டிருக்கிருயே! மேலும் உன்னிடம் நான் கேள்விகள் கேட்டு அதிகத் துன்பத்துக்கு உன்னை இலக்காக்கியிருக்கவேண்டும்."

"மேலும் என்ன! ஓராண்டு முழுதுக்கு வேண்டுமானலும் என்னிடம் நீங்கள் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்திருக்கலாம்! ஆனல் எந்தத் தகவல் உங்களுக்குத் தேவையென்று நீங்கள் காத்திருக்கிறீர்களோ, அதை மட்டும் நான் வெளியிட்டு விடுவேன் என்று நீங்கள் எதிர்பார்க்காதீர்கள்!" "நான் அவ்வளவு அவசரக்காரன் அல்ல!" என்றுன் வான்ஸ்ட்ரக்கல்.

"ஒவ்வொருவரின் உள்ள உறுதியைத் தகர்ப்பதற்கும் ஒரு திறவுகோல் இருக்கின்றது. நான் இதுவரை ஒரு தவருன திறவுகோலைப் பயன்படுத்தி வந்திருக்கிறேன். உனக்கு ஒரு பெண் இருக்கின்ருள் என்பதை இப்போதுதான் நான் தெரிந்துகொண்டேன்."

"எனக்குக் குழந்தைகளே இல்லையே!" என்றுன் உறுதி வாய்ந்த

குரலில் ஆர்ப்பாடி. "என் மனைவி யிருந்தாள். அவளைப்பற்றித்தான் நீங்கள் ஏற்கெனவே அக்கறை எடுத்துக்கொண்டு விட்டீர்களே!"

"உன் மனைவி! அவள் ஒரு நல் வாய்ப்பில்லாதவள். அதோடு, அவள் எம்மைப்போல் ஒரு நல் லினத்தைச் சார்ந்தவளுமல்லள்! உன் பெண்ணும் அப்படித்தான்."

"எனக்கு மகளே கிடையாது!" என்று அழுத்திக் கூறினான் ஆர்ப் பாடி.

"இப்படி வா. இருவருக்கு மிடையேயுள்ள மறைபொருளை மாற்றிக் கொள்ளலாம்" என்று கூறியவாறு தன் சட்டைப் பையி லிருந்து சிறிய காகிதத் துண்டு ஒன்றை எடுத்தான் வான் ஸ்ட்ரக் கல். உலோகப் பிடிபோட்ட தன் மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு அந்தச் சிறிய காகிதத் திலிருந்து படித்தான்.

"பெயர்: அன்னா மெசாரெஸ். பிறப்பு: சூலை 14, 1922, யபுடா பெஸ் டில். 1939ல் பாரிசுக்கு அனுப்பப் பட்டாள். பிரான்சு நாடு பிடிபடும் வரையில் சார்பானில் கலைக்கல் லூரி மாணவியாக இருந்தாள். இப் போது பாரிஸ் நகரத்திலேயே அன்னா மான்சன்ட் என்ற பெயரில், நண்பர்களோடு வாழ்ந்து வரு கிறாள்." காகிதத்திலிருந்து தன் பார்வையை அவன் நிமிர்த்தினான். "மேலும் படித்துக்கொண்டு போகட் டுமா அல்லது இதுவரை நான் படித் துக் காட்டியதே போதுமா?" என்று ஆர்ப்பாடியிடம் அவன் வின வினான்.

ஆர்ப்பாடியால் அதற்குமேல் தாங்கிக்கொண்டு நிற்க முடிய வில்லை. அந்தச்சேர்மானியன் கழுத் தைப் பிடித்து நெரித்துவிடவே அவன் துடி துடித்தான். அவன் மீது பாய்ந்துவிட்டான். ஆனால் பல நாட்கள் சித்திரவதைக்காளாகி, கொட்டடியில் அடைபட்டுக் கிடந்து உடல் நலிந்து போயிருந்த அந்தப் பேதையினால் எண்ணியதை எண் ணியவாறு இயற்றிக் காண முடிய வில்லை. அவனைத் தடுத்துத் தரை யிலே தள்ளுவதற்கு வான் ஸ்ட்ரக் கல் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட வில்லை.

சிறிது நேரம் அவன் தரையில் வீழ்ந்தபடியே கிடந்தான் — பேச்சு மூச்சற்றவன்போல் நடிப்புக்காட்டி. ஆனால் உண்மையளவில் அவன் அன்னாவைப்பற்றி நினைத்துக் கொண்டு, நினைத்துக்கொண்டே கிடந்தான். முடிவாக அவன் எழுந் தான். எழுந்து உட்கார்ந்துகொண் டான்.

மேலும் நடிப்புக்காட்ட அங்கே வழி கிடையாது. "என் மகளை நீ என்ன கதிக்கு ஆளாக்கினாய்?" என்று கதறும் குரலில் வினவினான் அவன்.

"இன்னும் ஒன்றும்அப்படி நடந்து விடவில்லை. இன்னும் யாருக்கும் இதுபற்றி எதுவும் தெரியாது. ஆனால் அரசியல் தொடர்பே இல்லா தவள்போல் நடிப்புக்காட்டிக்கொண் டிருக்கும் அந்த அன்னா மான்சண் டுக்கும் உனக்குமிடையேயுள்ள தொடர்புகள் வெளிப்பட்டுவிட்டன என்னைப் பொறுத்தவரையில்.

"அதுகூட எந்தவிதமான உள் நோக்கமும், இரகசியமும் இல்லா தனபோல் தென்பட்ட சில பத்திரங் கள், கடிதங்கள், அறிக்கைகள் இவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து வைத்துக்கொண்டு பார்த்தபோது தான் எனக்கு உண்மை புரிந்தது. நான் கோருகின்ற விவரங்களை மட் டும் நீ சொல்லிவிடு. அது வேறு யாருக்கும் தெரியவேண்டாம். நானும் தெரிவிக்கமாட்டேன்"

ஆர்ப்பாடி நிமிர்ந்துபார்த்தான். வான் ஸ்ட்ரக்கலின் பார்வையில் வெற்றிக் களிப்புத் தாண்டவமாடி யது. அந்த இரகசியம் வான்ஸ்ட்ரக் கலைத் தவிர வேறு யாருக்கும் எட்டி விடவில்லை என்பதையும் ஆர்ப்பாடி யால் நம்பமுடிந்தது.

வான் ஸ்ட்ரக்கல் ஒரு அமர்த்த லான பேர்வழி. தன்னிடமிருக்கும் துருப்புச் சீட்டை அவசரப்பட்டு அவன் வீசியெறிந்துவிடமாட்டான். உரிய சந்தர்ப்பம் வரும்வரை தன் கையிலிருப்பதைத் தன்னுடைய கூட்டாளியிடம்கூடக் காட்டிவிட மாட்டான் அவன்.

ஆனால் எவ்வளவு காலந்தான் இசைவுக்கு ஏற்ற வழி சந்தர்ப்பம் காத்துக்கொண்டிருக்கும்?

"நீங்கள் அதை யாருக்கும் தெரி விக்கமாட்டீர்கள் என்று எப்படி நான் நம்புவது?" என்றான் ஆர்ப் பாடி அந்தக் கர்னலைப் பார்த்து.

"ஒரு செர்மானிய அதிகாரி என்ற முறையில் நான் என் வார்த்தை யைக் காப்பாற்றுவேன்" என்றான் அவன் கனத்த குரலில்.

"பொறுத்திருந்து பார்ப்போம் அதை" என்றான் ஆர்ப்பாடி ஏள னக் குரலில்.

கர்னல் வான் ஸ்ட்ரக்கல் உட் கார்ந்துகொண்டான். "நீ இது வரை தொடர்புகொண்டிருந்த ஏசெண்டுகளின் பெயர் எனக்குத் தேவை."

"அவர்களின் பெயர் எனக்குத் தெரியாது. ஆனால் இரகசியமான இடம் ஒன்று இருக்கின்றது. அது ஒரு நாட்டுப்புறப்பகுதி. தேவைப் பட்டபோது அங்கு நான் செல் வேன். செய்திகளைச்சேகரம்செய்து கொள்வேன். மீண்டும் வந்துவிடு வேன். அவ்வளவுதான்." என்றான் ஆர்ப்பாடி.

"மிகவும் நன்று. எங்களை அந்த இடத்துக்கு அழைத்துக்கொண்டு போய்விடு" என்று கர்னல் கூறி னான்.

அந்த வார்த்தைக் கேட்டு அரை மனதோடு தலையை ஆட்டினான் ஆர்ப்பாடி.

"நான் இங்கு எவ்வளவு நாட்கள் இருந்துவிட்டேன் கர்னல்?"

"மூன்று வாரங்கள்."

"மூன்று வாரங்களா! மூன்று ஆண்டுகளைப்போல் தென்படுகின்ற னவே! ஆமாம், இப்போது இரவா பகலா?"

"இப்போது இரவு. கிட்டத்தட்டப் பத்து மணியாகப்போகிறது."

"மிகவும் நல்லது. இன்றிரவே நாம் அங்கு போய்விட்டு வந்துவிட லாம். இந்தக் காரியத்தை ஒருவழி யாக முடித்துவிடவேண்டும்" என் றான் ஆர்ப்பாடி.

நிலவறைக் கதவை அந்தச் செர் மானியன் பலமுறை தட்டினான். கடைசியாகத்தான் மூன்று ஒற்றர் களும் உள்ளே வந்தனர். பாதி பாதுகாப்புப்போலும், பாதி இழுத் துக்கொண்டுமாக ஆர்ப்பாடியை அந்த ஒற்றர்கள் மேல் அறைக்கு அழைத்துச்சென்றார்கள். அங்கே குளியல் அறை ஒன்றிற்குள் அவ னைத் தள்ளினார்கள். அவனுக்குப் புதிய உடைகள் கொடுத்தார்கள்.

கடந்த மூன்று வாரங்களில் அன்றுதான் அவன் தன் முகத்தை யும், கைகால்களையும் அலம்பிக் கொண்டான். அன்றுதான் தன் முகத்தை நிலைக்கண்ணாடியிற் பார்த்துக்கொண்டான். நிலைக்கண் ணாடியிற் கண்ட உருவத்தை அவ னால்அடையாளம் தெரிந்துகொள்ள மீசையும், தாடியும்அவன் முகத்தை வெள்ளை வெளேர் என்று நிறைத்து அடைத்துக்கொண்டிருந்தன. சரு

மம் வெளுப்பேறி மஞ்சள் வண்ணமாக மாறியிருந்தது.

அவன் தன்கைகளைப் பார்த்தான்; அவை தளர்ந்துபோய்ப் பயனற்றனவாய்த் தென்பட்டன. கால்கள் ஈரத்தரையில் நிற்கமாட்டாது தள்ளாட்டம்போட்டுக்கொண்டிருந்தன; அவை எய்த்துக்கிடந்த அவன் உடற்கனத்தைத் தாங்கமாட்டாது தவித்தன:

"சீக்கிரம்! விரைந்து வா!" என்று வாயிலில் நின்ற காவலன் கத்தினான். ஆர்ப்பாடி அவசர அவசரமாக உடை உடுத்து வெளியே வந்தான்.

திறந்த ஊர்தியொன்றில் இப்போது ஆர்ப்பாடி அமர்ந்திருந்தான். ஊர்தி ஓடிக்கொண்டிருந்தது. அப்போது குபுகுபுவென்று அவன்மீது வந்து மோதிய காற்றில் குளிர்மையிருந்தது. ஒரே சீரான தன்மை இருந்தது. அந்தக் காற்றோடு கலந்திருந்த நன் மணம் அவன் இதயத்தை ஊடுருவிக்கொண்டு சிலிர்த்தது. உள்ளம் நிரம்ப நிரம்ப அவன் அதைப் பருகிக்கொண்டே சென்றான்.

"நாம் போகின்ற வழி சரியான வழிதானா? நாம் போகின்ற வழி சரியான வழிதானா?" என்று ஆர்ப்பாடியின் விலங்கு மாட்டப்பட்ட கரத்தைத் திடீர் திடீரென்று பற்றிய வண்ணம் அடிக்கொருமுறை கேட்டுக்கொண்டேயிருந்தான் வான் ஸ்ட்ரக்கல்.

"நாம் போகின்ற வழி சரிதான், நேர்வழிதான்." என்று ஆர்ப்பாடியும் சொல்லிக்கொண்டே வந்தான். அவன் தன் கரத்தைத் திரும்பத் திரும்ப மடிமேல் எடுத்து வைத்துக் கொள்வது அவனுக்கொரு வேலையாகப் போய்விட்டது.

"அமைதியாக இருக்க நீங்கள் பழகிக்கொள்ளவேண்டும் கர்னல்; அடிக்கடி நீங்கள் பரபரப்பும், அவசரமும் அடைந்துவிடுகிறீர்கள். அது கூடாது.

"அதோ பாருங்கள் நிர்மலமான நீலவானத்தை! அங்கே நிலாப் பெண்ணாள் பவனி வரும் காட்சிதான் எத்துணை மாட்சி நிறைந்தது. பாருங்கள் கர்னல்; அந்த நிலாவைப் பாருங்கள்."

ஆர்ப்பாடி தன் இடப்புறமாக உட்கார்ந்திருந்த ஆளின் விலா வழியே கையை நீட்டி எதிரே ஊர்தியோட்டியின் பக்கவாட்டில் உட்கார்ந்திருந்த நாசி ஒற்றனின் தோள்மீது அந்தக் கையை ஊன்றிக்கொண்டான்.

"இப்போது உங்களைப் பார்த்து நான் சிறிதுகூட அஞ்சவேயில்லை. அஞ்சுவதற்கு ஒன்றும் கிடையாது" என்று சிரித்துக்கொண்டு ஆர்ப்பாடி கூறினான்.

"பாருங்கள் அங்கே! நிலாப் பெண்ணாள் எத்துணைப்பேரழகோடு பொலிகிறாள்! பார்வையிலிருந்து அந்தப் பொலிவெழில் மறைந்து போன பின்னர்தான் நீங்கள் எல்லாம் அதைப்பற்றி எண்ணுவீர்கள் போலும்! எவ்வளவு ஒளியோடு தென்படுகிறாள் அந்த நிலாப்பெண்! வாய்ப்பிருக்கும்போதே அந்த ஒளியையும், தெளிவையும், பொலிவையும் பார்த்துக்கொண்டுவிட்டால் தானே நல்லது!

"கர்னல், நீங்கள் இதையெல்லாம் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? அந்த நிலாப்பெண்தான் எவ்வளவு நளினமாக அந்த முகிற்கூட்டத்தோடு பந்தய ஓட்டம் ஓடுகிறாள்! ஆனால், ஒரு நாள்கூட இந்த முகிற்கூட்டம் அந்த நிலாப்பெண்ணைத் தொட்டது கிடையாது; கிட்ட நெருங்கியதுமில்லை.

"இந்த முகிற்கூட்டம் கூட எவ்வளவுதான் முயன்றுபோய் அந்த நிலாப்பெண்ணை மறைத்துக் கொண்டுவிட நினைத்தாலும், அந்த நினைப்பு வெட்டி நினைப்பாகத்தான் முடிகிறது. நிலாப்பெண்ணின் பாலொளி அந்தமுகிற்கூட்டத்தைக் கிழித்து வெளியேறி வந்து நம் கண்ணுக்கெல்லாம் விருந்தளிக்கத்தான் செய்கின்றது. கர்னல், இந்தக் காட்சியே தெம்பளிக்கக்கூடிய நல்லதொரு காட்சி கர்னல். பாருங்கள் மேகக் கூட்டம் எப்படிக் கடந்துகொண்டிருக்கிறது! பாருங்கள் நிலவெழிலாள் எப்படி ஒளி உமிழ்ந்துகொண்டிருக்கிறாள்!"

ஊர்தியோட்டியைத் தவிர மற்றெல்லாரும் இப்போது வெண்ணிலாவை அண்ணாந்து நோக்கிக் கொண்டிருந்தனர்.

"இந்த இளைஞன்" என்று திரும்பவும் பேச்செடுத்து ஊர்தியோட்டியின் தோள் பட்டையில் தட்டிக் கொடுத்தான் ஆர்ப்பாடி.

"அமைதி பெறுவதும், இளைப்பாறுவதும் எப்படி என்பதை இந்த இளைஞன் நன்றாக அறிந்துகொண்டிருக்கிறான்.

"இப்போது இவன் பாட்டையைத் தவிர வேறு எதையாவது பார்க்கின்றானா? இப்படியும், அப்படியும் திரும்புகின்ற வளைவுகளைத் தவிர வேறு எதிலாவது இவன் கவனம் செல்லுகின்றதா? இவன் நோக்கெல்லாம் ஊர்தியிலிருந்து தெறித்துப் பரவும் ஒளியின்மீது. அந்த ஒளி பட்டுப் பட்டு மறைகின்ற சிமிண்டுச் சாலை மீது. இதன் மூலம் ஆறுதல் காணும் வழியை அவன் கண்டுகொண்டுவிட்டான். இனி அவன் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போய்க்கொண்டேயிருப்பான். நான் உங்களுக்கு உறுதி கூறுகின்றேன்.

"இப்போது வலப்புறமாகத் திரும்பு!" என்று ஆர்ப்பாடி அதே மூச்சில் கத்தினான்.

ஊர்தி எதிர்ப்புறமிருந்த சந்திப்பிலிருந்து வலப்புறமாகத் திரும்பி ஓடத் தொடங்கிற்று. இருட்டைக் கிழித்துக்கொண்டு அந்த ஊர்தி விரைந்தவண்ணமிருந்தது. அதன் பின்னால் கவச ஊர்திகள் மூன்று தொடர்ந்து வந்துகொண்டிருந்தன.

"இங்கிருந்து இனி நேரே போய்க்கொண்டிரு!" என்று ஊர்தியோட்டியைப் பார்த்துத் திரும்பவும் கூறினான் ஆர்ப்பாடி. "இனி ஒரே நேர்தான். சாலையை நேராகப் பார்த்துக் கொண்டே போனால் போதும். திருப்புச் சகடுமீது சும்மா கை வைத்துக்கொண்டு வந்தால் போதும். அதை இப்படி அப்படி ஒடிக்கவேண்டியதில்லை. திருப்ப வேண்டியதில்லை. இன்னும் கொஞ்சம் வேகமாக நீ போகலாம்"

"நீ சும்மாயிரு!" என்று கர்னல் கத்தினான். "வேகத்தைக் குறை!" என்று ஊர்தியோட்டியைப் பார்த்துக் கூறினான்.

ஊர்தியோட்டி கர்னலின் கட்டளைக்குச் செவி மடுக்கவில்லை. அவன் வேகமாக ஊர்தியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

"ஊர்தியோட்டியின் தோள் பட்டையைப் பற்றி அசைத்து மெல்லப் போ, மெல்லப் போ என்று திரும்பவும் கத்திக்கொண்டு வந்தான் கர்னல். ஆனால் ஊர்தியோட்டியோ அதைச் சட்டை செய்யவில்லை. அவன் பார்வை சாலைமீது படிந்து கிடந்தது. அவன் பாதம் ஊர்தியின் விசையை அழுத்திக்கொண்டிருந்தது.

"மேலான மனிதரே! இப்போது உம்முடைய வார்த்தைக்குஅவனைக்

(12-ம் பக்கம் பார்க்க)

"ஊதுவத்திப் பொறி!"

—[குழலோன்]—

அன்று வந்த கடிதங்களைப் பிரித்துக்கொண்டிருந்த எழுத்தாளர் அமரனின் கண்களைக் கவர்ந்தது, ஒரு பெரிய உறை. அதிகமான பக்கங்களைக் கொண்ட அது கடிதமா? கதையா? என்று புரியாமல் படிக்கத் துவங்கினார்.

உயர்திரு அமரன் அவர்களுக்கு,

நான் ஒரு கதைப் பித்துக்கொண்டவன். கடந்த வாரம் தாங்கள் எழுதிய கதையைப் படித்ததின் விளைவே, என் கருத்தையும் தங்களுக்கு இக்கடித மூலம் எழுதுகிறேன். தங்கள் கதையின் கருத்துக்கும்; இன்றைய நடைமுறைக்கும், தவறு! தவறு!! என் அனுபவத்திற்கும், வேற்றுமைகள் நிறைய இருப்பதை உணர்ந்து, தங்களிடம் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

நான் அப்போது ஒரு போலீஸ் அதிகாரி. ஒரே சமயத்தில், கணவன், மனைவி இருவரின் தற்கொலை வழக்கை விசாரிக்கச் சென்ற நான், அங்கு சில சிக்கல்களைக் கண்டேன். கணவன், உடல்நலமில்லாக் காரணத்தால், தூக்க மாத்திரை அருந்தியதின் அளவு சிறிது அதிகமாகவே, இறந்திருக்கிறான். மனைவி ஆற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாள். ஊராரோ, 'ஆ! இவளல்லவோ பெண்! கணவன் பிரிந்த பிறகு உயிர் வாழ்வது சிறந்ததல்ல என்று எண்ணித், தன் உயிரையும் மாய்த்துக்கொண்டாள் என்று ஆச்சரியக் குறி எழுப்பிக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த வீட்டில் எனக்குக் கிடைத்த கடிதம், என் மூளைக்கு வேலை கொடுத்தது. அக்கடித உறையின்மேல்; 'அத்தான் அவர்களுக்கு' என்று ஒரு பெண்ணின் கையெழுத்துத் தெரியவே, அக்கடிதத்தை மறைத்துக் கொண்டேன். கணவன் வீட்டில் இறக்க, மனைவி ஆற்றில் இறந்திருக்கிறாள். ஆனால், அவளுக்கு, கணவன் இறந்தது தெரியாது. ஊரோ, 'கணவன் பிரிவு தாளாமல் மனைவி மாய்ந்திருக்கிறாள்' என்கிறது. இதற்கெல்லாம் விடையாக இருக்கும் கடிதம் என்னிடம். நான் இன்றளவும், அக்கடிதத்தை யாருக்கும் தெரிவிக்கவில்லை. ஆனால், வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலையைத் தங்கள் கதையின் கருத்து உண்டாக்கியிருக்கிறது! 'இக்கடிதத்திற்கும், கதைக்கும் என்ன ஒற்றுமை? என்று உங்கள் மனம் கேள்விக் குறி இடுவதை உணருகிறேன்.

தங்கள் கதையின் இறுதியில், முடிவுரை கூறியிருக்கிறீர்கள், 'பெண்மையின் மேன்மைக்கு உலகம் தலை வணங்குகிறது. ஏன்? அவளின் ஒழுக்கமும், கற்பு எனும் விலையில்லா மகுடமும் அவளை அலங்கரிக்கிறது. மகுடம் அணிந்த மன்னனுக்கு அளிக்கும் உயர்வைப் போல், மாதர்களுக்கும் உயர்வளித்துப் போற்றுகிறது உலகம். ஆனால், பெண் கெடுகிறாள் என்றால், அதற்கு முழுமையான குற்றவாளி சமுதாயம்! சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வு, அதன் விளைவால் ஏற்படும் தன்மைதான், இந்நிலைக்குக் காரணம். ஆகவே சமுதாயத்தை சீர்திருத்த வேண்டும்!'—என்று.

இன்றைய உலகம், தான் செய்யும் தவறுகளை ஒரு சில வார்த்தைகள்' எனும் திரையாலே மூடி மறைக்கப் பார்க்கிறது. ஆனால் அந்தத் திரை 'நைலான் திரை'! மறைக்க முயன்றாலும் அதன் ஊடே, அக்குற்றம் தெற்றெனத் தெரிகிறது. அந்தத் திரைதான், 'சமுகம், உலகம், சூழ்நிலை, மனச்சாட்சி' என்பவை! ஆனால் ஒன்றை மட்டும் மறந்துவிடுகிறார்கள் ... நீங்கள் கூடத்தான்...! உலகம், சமுகம் என்பதெல்லாம், நம்போன்றமக்களால் உருவாக்கப்பட்டவைதான். நம் போன்றவர்கள் ஒன்று சேர்ந்தால்தான், அது சமுகமாகிறது, என்பதுதான் அது. 'படிக்காமல், தேர்வில் தோல்வியுற்ற மாணவன், ஆசிரியர் மதிப்பெண் போடவில்லை' என்று ஆசிரியர்மேல் பழி சுமத்துவதுபோல், நாம் செய்த தவறுகளுக்கு, நம்மால் உருவாக்கப்பட்ட சமுகத்தின்மேல் பழியைப் போட்டுத், தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறோம். நீங்கள் தங்கள் எழுத்துக்களில், 'இப்படித்தான் இருக்கவேண்டும்' என்று கூறினீர்கள். ஆனால் நான், 'இப்படித்தான் இருக்கிறார்கள்! என்று கூறுகிறேன். இதில் எந்த முறை சிறந்த முறை, படிப்பவர்கள் உள்ளத்துடன் கலந்து, விளைவை ஆராயச் செய்கிறது என்பதை அவர்கள்பால் விட்டுவிடுவோம். ஆகவே, மனிதன் திருந்தினால், சமுகம் தானாகவே திருந்திவிடுகிறது. நாம் செய்யும் தவறுகளை மீண்டும் மீண்டும் செய்துகொண்டே, சமுகத்தைக் குற்றக் கூண்டில் நிறுத்துவது முட்டாள்தனம். நிற்க. நான் அன்று மறைத்த கடிதத்தை இத்துடன் இணைத்துள்ளேன். அதைப்படித்து, மனிதன் குற்றவாளியா? அல்லது அவனால் உருவாக்கப்பட்ட சமுகம் குற்றவாளியா? என்று எண்ணிப் பார்க்கவும்! கடிதத்தின் சம்பவம் நம்பக்கூடியதாக இருக்காது. ஒரு பெண் இப்படியும் எழுதியிருப்பாளா என்று உலகம் கேள்விக்குறி எழுப்பும்! ஆனால் நடந்த உண்மையைக் கூறும்போது, மற்றவைகளைப்பற்றி நமக்குக் கவலை இல்லை! கடிதத்தைத் தொடர்வும்...

அத்தான்!

இக் கடிதத்தைக் கண்டதும், அலைபாயும் தங்கள் மனம் சிறிது ஆறுதலடையும் என எண்ணுகிறேன். 'அத்தான்' என்றுஆசையுடன் அழைக்க எனக்கு உரிமை இருக்கிறதா? என்ற வினாத்தான், இக்கடிதத்தை எழுதி வைத்துவிட்டு

என்னை நானே மறைத்துக்கொள்ளும் நிலையை அளித்தது.

தங்களிடம் நேரில்கூறி, மன்னிப்புக் கேட்க, என் மனம் இடம்தராது. அப்படித் தங்கள் எதிர் நின்று என் தவறுகளைக் கூறினாலும், நீங்கள் ஒருவேளை கொலைகாரர் ஆவீர்களோ என்ற எண்ணம் என்னை அதனின்றும் தடுத்தது. மனைவியால் வஞ்சிக்கப்பட்ட நீங்கள் அவளாலேயே 'கொலைகாரன்' என்ற பட்டமும் பெற்றுச் சட்டத்தின் கோரப்பிடியில் ஏன் அகப்பட்டுக்கொள்ளவேண்டும்?

''என்ன இவளுக்குப்பைத்தியமா? பாவம் புரிந்தாளாம்; வஞ்சிக்கப்பட்டேனும்; கொலைகாரன் ஆவேனும்'' என்றெல்லாம் தங்கள் மனம், புரியாமல் தத்தளிப்பதை நான் உணருகிறேன். தங்களை ஏமாற்றி, நல்லவளாக மாற இக்கடிதம் எழுதவில்லை! என் மனம் அமைதியடையவே இக்கடிதத்தை எழுதி, என் கொடுமைகளுக்கு நேரில் கூறிக் கதறி அழாவிட்டாலும், எழுத்தில் வடித்து அலறுகிறேன். ஆண்டவனிடம், பாவமன்னிப்பு கேட்கும்போது, ஆண்டவனுக்குத் தெரியாததா என்று பாவங்களைக் கூருமல் இருப்பதில்லை. செய்த பாவங்கள் அத்தனையும் கூறிதான், 'ஆண்டவா! தெரியாமல்செய்த தவறுக்கு என்னை மன்னிப்பாயா?' என்று இறைஞ்சுகிருர்கள். வைதிகர்கள், அதாவது பகுத்தறிவைப் பகைமையாகக் கொள்பவர்கள். அதேபோல், என் கொடுமை வாழ்க்கையைக்கூறி மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுகிறேன்—என்னிடம் பகுத்தறிவுக்குப் பணியும் இயல்பு இருப்பதால். தண்டனையை நானே ஏற்றுக்கொண்டேன்.

அரசூரின் ஆற்றங்கரை நமக்கு அந்திப்பொழுதின் அழகைக்கூறி, ஆவலைத் தூண்டும். அப்போது, இராதை! அழகு குமிழிடும் ஆற்றங்கரை மணலில், அமுதமலராக நீ இருக்கிருய்! மாசு மருவற்ற உன் முகத்தை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்போல் தோன்றுகிறது' — என்றெல்லாம் கூறுவீர்கள்.

அன்று முகம் மட்டுமா மாசு, மருவற்று இருந்தது! உள்ளமுமல்லவா மாசு மருவற்று இருந்தது. என் இதயத்தில் இரத்தம் மட்டுமே ஓடிக்கொண்டிருந்தது அப்போது! ஆனால் இப்போது? அந்தச் சிவந்த இரத்தத்துடன், ஏதோ ஒரு குற்ற உணர்ச்சிக்குழம்பும், கொப்பளித்து குதித்துக்கொண்டு ஓடுகிறது.

கடந்த, இரு வாரங்களாக, உடல் நலமில்லாக் காரணத்தால், அலுவலகத்திற்குப் போகாமல், விடுமுறையில் வீட்டிலிருந்தீர்கள். அமுதன் வந்திருந்தான் பார்த்துவிட்டுப்போக! நம் திருமணத்தின்போது பார்த்தது. கூடப்பிறவாக் குறையை தீர்க்க வந்தவன். ஒடிந்துவிழுவதுபோல் காட்சி அளிக்கும் அவனைப் பார்க்கும் போதெல்லாம், எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கும்.

இன்று...... அப்பா! தங்களைவிட பெரியவன்போல், அவன் உருவம் எப்படி மாறிவிட்டது. எவ்வளவு அழகாக நிறம்மாறி கொழுகொழுவென்றிருந்தான்.

இந்த எண்ணம்தான், என் மனதில் அவ்விஞடி முதல் வளர்ந்து முழு உருபெற்றது. ஆம்! என் மனம் அவன்பால் நாட்டம் கொண்டது. என் உடலில், ஏதோ ஒரு இனம் அறியாப் படபடப்பு! எண்ணத்தின் தவறு என் இதயத்தைக் கலக்கியது, தெளிந்த நீரில் துரும்பு ஒன்று போட்டால் அலை சுழித்து ஓடி மறையுமே, அதுபோல. சூரியனைச் சுற்றும் பூமியாவது, ஒரு ஆண்டு எடுத்துக்கொள்ளுகிறது; ஆனால் இந்த மனம்...? ஒரு விஞடிக்கு ஒரு பயங்கர உருப்பெறுகிறது.

அப்போது உங்கள் எண்ணம் தோன்றும். ஆனால்...? உங்கள் மீது அன்பு... அவன்மீது ஆசை! ஆசை. அன்பை வென்றது. பயன் கருதாமல் செலுத்துவது அன்பு! பயன் கருதி விரும்புவது ஆசை!

இனிப்புப்பண்டங்களெல்லாம் சர்க்கரையும், மாவும் கலந்துதான் செய்கிருர்கள். ஆனால் தங்களுக்கு மைசூர்பாகு பிடிக்கும், இலட்டுப் பிடிக்காது. அதேபோது, இலட்டைச் சிறிது சுவைக்காமலும் இருப்பதில்லை! அதேபோல் அன்புள்ள நீங்கள் இருந்தாலும், அவன்மேல் ஏதோ ஒரு ஆவல், வெறி என் உடலில் பரவி விரிந்து, துளைத்தது.

அன்றிரவு, அவனை அமுதம் என்று நினைத்து அருந்தினேன். பாவம்! என்னால் களங்கம் பெற்ற அவன், அப்போதே போய்விட்டான். அவ்விளம் இதயத்தில், என்னென்ன பயங்கர எண்ணங்கள் எழுந்து, மடிந்தனவோ? தவறென்று தெரிந்தும் செய்தேன்! பெண் தன் கற்பை மதிக்கும் வரைதான், அது ஆதவன் அளித்த ஒளியாக மிளிர்கிறது; அவளே அதை மதிக்காவிட்டால், ஊதுவத்திப் பொறியாகிறது.

அந்த வேகம் அடங்கிய பிறகுதான், என் தவறு கண்முன் தோன்றிக் கோர நடனமாடியது. மனம் பேரிடியாகஎழுந்து பயங்காட்டியது. 'நீ அருந்தியது அமுதமாக இருக்கலாம்! ஆனால் உன்னைப் பொறுத்தவரை அது விடம்!' என்று ஆயிரம் குரல்கள் இதயச் சுவரில் மோதி, எதிரொலித்தன. தவறை மறைத்து வாழமுடியும் என்னல்! ஆனால் செய்த துரோகத்திற்கே பரிகாரம் செய்யாதபோது, இது வேறு துரோகமா? என்று மனச்சாட்சி இடித்துக் கூறியது. நீங்கள் நினைக்கலாம், 'தவறு செய்வதற்கு முன் தடுக்காத மனம், செய்த பிறகு சாட்சிக்கு வருகிறதா?' என்று. இதற்கு என்னல் விளக்கம் கூறமுடியாது. ஆனால், 'சாக்ரடீஸ்' கூறிய மொழியை விடையாகவைக்கிறேன் ''மனம் ஒரு நல்ல வேலைக்காரன்; ஆனால் மோசமான எஜமானன்!''

இச்சம்பவத்தையோ, கடிதத்தையோ உலகம் காணநேர்ந்தால், 'இவளும் ஒரு பெண்ணு? இப்படியும் நடக்குமா?' என்று கேள்விக்குறியை எழுப்புமே தவிர, நிகழ்ச்சியின் பின்னணியை நினைத்துப் பார்ப்பதில்லை. பெண் ஒரு எரிமலை! அமைதியாக இருக்கும்வரை ஆபத்தில்லை! ஆனால் குமுறத்தொடங்கினல் ஏற்படும் அழிவு......?

நானே எனக்குத் தண்டனையை தேர்ந்தெடுத்துக்கொண்டேன். என் கொடுமைகளை, ஆற்றுநீரின் வேகத்தில் கரைத்துவிட முடிவுசெய்துவிட்டேன். கொடுமை கரைத்த, உள்ளச் சுமை குறைந்த, இதயத்துடிப்பு அடங்கிய இராதை, ஆற்றங்கரையின், ஏதோ ஒரு மூலையில் ஒதுக்கப்படுவாள்! ஏதோ ஒரு மூலைக்கே போகட்டும்! என் பிணத்தைக்கூடப் பார்க்காதீர்கள், இதுவே என் கடைசி வேண்டுகோள்! போகிறேன்......

இராதை.

'அமரன்! கடிதத்தைப் பார்த்தீர்களா......?

மேலே படிக்க முடியவில்லை அப்பெரியவரின் கடிதத்தை அமரனல்,

ஆம்! கண்ணில் திரையிட்ட நீர் அந்தப் பெரியவரின் கடிதத்தை மறைத்தது! ஒரு பெண்ணின் மன பலவீனம், எந்த அளவுக்கு அவள் குடும்பத்தையும், அவள் அங்கம் வகிக்கும் சமுகத்தையும் பாதித்தது. அணுசக்திக்கு ஒப்பானவள்போலும் பெண்! உயிரின் மேன்மைக்குப் பயன்படுத்த உதவும். அணுசக்தி, உயிரின் அழிவுக்கும் பயன்படுவது போல்பெண்ணாலேவாழவைக்கவும்முடியும், சாகடிக்கவும் முடியும்போலும். 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்று கூறியவர், நல்ல அனுபவ முத்திரையுடன் கூறியிருக்கவேண்டும்! என்றெல்லாம் அமரனின் மனக்கடல், அலை அலையாக எழுந்து பேரிரைச்சலை உண்டாக்கியது. தெளிந்த நீரில் படிந்துவிட்ட பாசியாக இருந்த அந்நினைவு, இக்கடிதத்தால்கலக்கிவிடப்பட்டது; கடிதமா அது? இல்லை! அது கடிதமல்ல—அமரன், வாழ்க்கை வரலாற்றின் ஒரு அத்தியாயம்! எழுத்தாளர் அமரன், சாதாரண அமுதனாக இருந்த நாளில், ஏற்பட்ட இந்த வடு, மறுபடியும் கீறிவிடப்பட்டது, இக்கடிதத்தால். 'அவள் பழியைத்தீர்த்துக்கொள்ள,உயிரைப் பணயம் வைத்து, பயணம் செய்துவிட்டாள். ஆனால் நான்...? அந்த நினைவு அலைகளால் அலைகழிக்கப் பட்டு, அந்தநினைவு மறக்க, உலகத்தின் கண்களுக்கு, இராதைபோன்ற பெண்களின் வாழ்க்கை தெரியக்கூடாது என்பதற்காகத்தானே, பெண்களின் உயர்வைப்பற்றியே எழுதுகிறேன்; சமுகத்தின்மேல் குற்றம் சுமத்துகிறேன் — வாழத்தெரியாதவன் விதியின்மேல் பழிபோடுவதுபோல. ஆனால் நண்பர் தம் கடிதத்தில் குறிப்பிட்டதுபோல், 'இப்படித்தான் இருக்கவேண்டும்' என்று கூறி புரியவைப்பதைவிட, 'இப்படித்தான் இருக்கிறார்கள்!' என்று எழுதுவதுதான், அவர்கள் தம் சேவையை முழுமையாகச் செய்ததாகப் பொருள்'—என்றெல்லாம் 'ஓ'வென்று அலறவேண்டும் போல் தோன்றியது அமரனுக்கு. மனம் என்ன குளமா? விரைவில் தெளிந்து நிற்க. கடலல்லவா? ஓயாமல் அலைவீசிக்கொண்டுதான் இருக்கும்; நாம் அதற்கு என்ன செய்ய?

9-ம் பக்கத் தொடர்ச்சி

கட்டுப்படுத்திக்கொண்டு வாரும் பார்க்கலாம்! உங்கள் உறுதியை இப்போது பயன்படுத்துங்கள் பார்க்கலாம். உண்மையளவில் உங்கள் உறுதிதானே மனதைவிட வலுநிறைந்தது."

வான் ஸ்ட்ரக்கல் அவசர அவசரமாக ஆர்ப்பாடியின் அருகிலிருந்த தன்னுடைய நாசி ஒற்றனைப் பார்த்தான். அவன்கூட அந்த ஊர்தியோட்டியைப்போலவே சாலையின் மீது செலுத்திய பார்வையைச் செலுத்தியவண்ணம் ஆடாமல், அசையாமலிருந்தான்.

முன்னால் குனிந்து எதிரிலிருந்த தன் ஒற்றனைத் தாக்கி, அவன் தலையிலிருந்த குல்லாயைத் தட்டிவிட்டு "ஊர்தியோட்டியைமெல்லப்போகச் சொல்" என்று கத்தினான் வான் ஸ்ட்ரக்கல். அந்த ஒற்றனோ எதற்கும் அசையவில்லை.

இப்போது அவன் ஆர்ப்பாடியின் பக்கம் திரும்பினான். கண்களிற் கடூரம் கொப்பளித்தது.

"நிறுத்தச் சொல்" என்று கத்தினான்.

"முடியாது" என்றான் ஆர்ப்பாடி அமைதியாக.

"அவனை நிறுத்தச்சொல்" என்று திரும்பவும் கத்தினான் வான் ஸ்ட்ரக்கல். "நிறுத்தச்சொல். இல்லையேல் உன்னைச் சுட்டுக்கொன்றுவிடுவேன்" என்று தன் இடைவாரில் செருகப்பட்டிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தான் அவன்.

"கொல்லுங்கள் கர்னல்! இனி மேல்தானா என்னைக் கொல்லப் போகின்றீர்கள்?" என்று சிறுநகை புரிந்துவிட்டு "என்னை ஏற்கனவே கொன்றுவிட்டீர்களே! அன்ட்ராசி அட்டில், அந்தக் கொடிய நிலவறையில் நீங்கள் நடத்திக்காட்டியது அதுதானே!" என்றான் ஆர்ப்பாடி.

"அந்தச் சிறைக்குகைக்குள் இருந்தபோது நீங்கள் என்னிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக்கொண்டுவிட்டீர்களே கர்னல்! அங்கே நீங்கள் என்னிடம் விட்டு வைத்தது நினைக்கவும், நேசிக்கவும், பகைக்கவும் கூடியதொரு சிறு துண்டு உள்ளத்தை மட்டுந்தானே! அந்தச் சிறியவுள்ளமே இப்போது உம்மைக்கொல்லும் ஆற்றலுக்கும் கூடுதலான ஆற்றலைப் பெற்றுவிட்டது பெரிய மனிதரே, மேலான மனிதரே!"

"நீ உன்னைக் கொன்றுகொள்ள மாட்டாய்! நீ எதற்காகவோ என்னை அதட்டி மிரட்டிப் பார்க்கிறாய்!" என்று நம்பிக்கையிழந்த குரலிற் கூறினான் வான்ஸ்ட்ரக்கல்.

"கர்னல், உங்கள் உள்ளந்தான் எத்துணை வெறுமை நிறைவாய் மனிதத் தன்மையை இழந்துவிட்டு நிற்கிறது. இதோ பாருங்கள்! நிறைவு பெற்ற உண்மையொன்று உங்களுக்குக் காத்துக்கிடக்கின்றது. எதிரில் பெரிய திருப்பம் ஒன்று இருக்கின்றது, இன்னும் இரண்டே கல் தொலைவுதான் அதற்கு. அந்த வளைவை இந்த ஊர்தி தாண்டும்போது யார் சொல்வது சரியென்று நீங்களே தெரிந்துகொள்ளலாம். மிதமிஞ்சிய தர்க்க வாதத்தோடு நீங்கள் காட்டுகின்ற ஆணவப் போக்குத்தான் சரியா, 'ஒட்டியும் ஒட்டாமலும் ஊசலாடிக்கொண்டிருக்கும் என் உயிரைப் போக்கிக்கொண்டு விடு' என்று கூறுகின்ற என் தன்மானத்தின் கருத்துத்தான் சரியா என்பதைத் தெரிந்துகொள்ளலாம்!"

"இந்த ஊர்தியை நிறுத்து! இந்த ஊர்தியை நிறுத்து!"

கத்தினான் வான்ஸ்ட்ரக்கல். மிக மிக உரக்கக் கத்தினான் பின்னால் விரைந்து வந்துகொண்டிருக்கும் கவச ஊர்திகளைப் பார்த்து.

"உங்கள் குரல் அவர்களுக்கு எட்டாது கர்னல்! அவர்கள் அரைக்கல் தொலைவு அப்பால் வருகின்றனர் கர்னல்" என்று மென்குரல் எடுத்துக் கூறினான் ஆர்ப்பாடி.

ஆர்ப்பாடியின் பக்கம் திரும்பினான் வான் ஸ்ட்ரக்கல். அவன் கண்களில் ஒரு பெரும் விலங்கச்சம் குடிகொண்டு கிடந்தது. "நிறுத்தச் சொல்!" என்று மீண்டும் கத்தினான்.

ஆர்ப்பாடி சிரித்தான் "நான் என் உறுதியை இழந்துவிட்டேன்!" என்று அவன் கூறிக்கொண்டிருந்தான். அதே வேளை விரைந்தோடிய அந்த ஊர்தி எதிரிலிருந்த டான்யூப் ஆற்றங்கரையின் தடுப்புவேலியைத் தாண்டிக்கொண்டு ஆற்றுக்குள்ளே போய் விழுந்தது.

★

நீயேற்றதே தொண்டு

★ கனகு ★

"நாடு வாழவேண்டுமென்பதற்காகத் தன்வாழ்வைத் தியாகம் செய்துகொண்டவர் என்தந்தையார். அதாவது 'தியாகம்' என்ற சொல்லுக்குக் காந்தியடிகள் என்ன பொருள் கொண்டிருப்பாரோ, அந்தப் பொருளில் அந்தச் சொல்லை இங்கு நான் பயன்படுத்துகிறேன். வீட்டை மறந்து சென்றவர், குடும்பத்தைத் துறந்து சென்றவர், சொத்துச்சுகங்களையெல்லாம்உதறிவிட்டுப்போனவர் நாட்டுப் பணிக்காக என் தந்தை. நான் படிப்பதற்கு வசதி கிடைக்காமல் தெருவில் நின்றேன். அப்போது ஊரிலுள்ள பிள்ளைகள் எல்லாம் படிக்கும் வாய்ப்பையிழந்து தயங்கிக்கிடக்கின்றனவே என்று ஊர்ப்பிள்ளைகளுக்காகப் பாடுபடுவதற்கு அவர் எங்கோ ஓடினார். நாட்டிலுள்ள பிள்ளைகள் எல்லாம் படிக்கும் வாய்ப்பை முடையின்றிப் பெறும்போது என் குழந்தையும் படிக்கட்டும். நாட்டிலுள்ள மற்றக் குழந்தைகள் அந்த வாய்ப்பை இழந்து நின்றால் என் குழந்தைக்கும் அந்தப் படிப்புவேண்டாம்' என்று என்னைப் பற்றிக் குறிப்பிட்டோரிடம் காந்தியவாதம் புரிந்தவர் என் தந்தை. பின்னும் ஒருபடி மேலேசென்று, 'தம்முடைய அன்பு மனையாள் — என்னைப் பெற்ற தாய் — நோய்வாய்ப்பட்டுச் சாவோடு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும்போது எங்கோ ஒரு ஊரில், ஆங்குள்ள ஏழைப் பாட்டாளி மக்கள் நோய் தீர்க்கும் மருத்துவமனை இல்லாத காரணத்தால், அகால மரணமடைகிறார்கள். —அநியாயச் சாவு சாகிறார்கள், அந்த நிலை இனியும் நீடிக்கக்கூடாது' என்று கூறி அரசோடு போராட்டம் நடத்தப் போயிருந்தார் என்தந்தை.

கடைசியில், என் தந்தை சாகும்போது எங்கள் சொந்த வீடு பறிபோயிருந்தது. நான் கூட அவர் அருகிலில்லை,"

மேலே ஐயையால் பேச முடியவில்லை. நானும் என்னை மறந்து துயரத்தில் ஆழ்ந்துவிட்டேன். சற்று நேரம் பொறுத்துத்தான் என்னாலும் பேச முடிந்தது.

"உண்மையான தொண்டர்களுக்கும், உண்மையான உழைப்பாளர்களுக்கும் எப்போதும் இப்படிப்பட்ட அவதிச் சூழ்நிலைகள்தாம் காத்திருக்கின்றன. ஆமாம், இப்போது இதை நீங்கள் வெளியிடப்போகிறீர்களா நூலாக?"

"வெளியிடுவதா? அத்துணை எளிதா அது? என் தந்தை அப்படியொன்றும் அமைச்சர் நாற்காலியில் இல்லையே இதனை எடுத்த எடுப்பில் யாரும் வெளியிடுவதற்கு முன்வர!"

எவ்வளவு துல்லியமாக இன்றைய நிலையை அறிந்துவைத்திருக்கிறாள் ஐயை. அப்போது எனக்கொரு செய்தி—இந்தமாதிரி வெளியீட்டுச்செய்தி நினைவுக்கு வந்தது. அதை நான் ஐயையிடம் சொன்னேன்.

"நீங்கள் சொல்வது சரிதான். சமீபகாலத்தில் வெவ்வேறு காரணத்துக்காக, வெவ்வேறு சமயம், வெவ்வேறு முறையில் இரண்டுபேர் வெளிநாட்டுக்குப் போயிருந்தார்கள். அவர்களில் ஒருவர் அமைச்சர். அவருக்கும், அவரை அனுப்பியவர்களுக்குமே அது தெரியாது. மற்றொருவர் அரசு அலுவலிலிருக்கும் சிறந்த எழுத்தாளர். அவர் தொழில் நுணுக்கப் பயிற்சிக்காகப் போயிருந்தார். அதுவும் வெளிநாட்டார் அழைப்பின்மீது, அழைத்தவர்களின் செலவிற்போயிருந்தார்.

அவர் தமது செலவைச் சரியானபடி பயன்படுத்திக்கொண்டார். தொழில் நுணுக்கப் பயிற்சிபெற்றுக்கொண்டதோடு அமையாமல், தான் சென்ற நாடுகளைப்பற்றியும், ஆங்காங்கே கண்ட காட்சிகளைப் பற்றியும் அருமையான பயணக் கட்டுரைகள் வரைந்தார். அந்தக் கட்டுரைகள் இலக்கியச் செறிவு மிக்கவை. பயன்தரும் செய்திகள் நிறைந்தவை. தமிழருக்கு என்றென்றும் உதவக்கூடியவை. தமிழ்மொழியின் எழிலையும், பொலிவையும் ஏற்றிக் காட்ட வந்தமைந்த புதுமையும், மணமும் நிறைந்த வாடாமலர்களை ஒத்தவை. அந்த அருமையான கட்டுரைகள் இன்னும் நூலாக்கம் பெறவில்லை. அதை எந்தப் பதிப்பகத்தாரும் வெளியிடுவதற்கு முந்திக்கொண்டு ஓடிவரவேண்டாம்—முன்வரவில்லை.

அதே சமயம் அந்த அமைச்சரும் சில கட்டுரைகள் வரைந்தார். அப்பப்பா! அந்தக் கட்டுரைகளுக்குத்தான் எத்தனை மவுசு! வெளியீட்டாளர்கள் விழுந்தடித்துக்கொண்டு அதை வெளியிட்டுவிட்டார்கள். பெரிய அமைச்சர்கள் எல்லாம் வந்து அந்த வெளியீட்டில் கலந்துகொண்டு மிகப் பெரிய விழாவே நடத்திவிட்டார்கள். அதோடு மட்டுமா? அந்த அமைச்சரின் அந்தக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் வேறு பெயர்த்து வெளியிடப் போகிறார்களாம். நாடோடி மொழியாம் இந்தியிலும் வெளியிடப் போகிறார்களாம்! அந்த வெளியீடுகளுக்கு எப்படி எப்படியெல்லாம் எங்கெங்கெல்லாம் விழாக்கள் நடத்துவார்களோ!—இதிலே மிகமிக வேடிக்கையானது—வேடிக்கையானதா அது! வேதனையானது—என்ன தெரியுமா? சிறந்த எழுத்துக் கலைஞர்கள், மொழித்துறை வல்லுநர்கள் எல்லாம் கலந்துகொண்டு அமைச்சர் எழுதிய அந்த நூலைப் பாராட்டிப் புகழ்ந்துரையாடியிருக்கிறார்கள்! பாராட்ட வேண்டாம் அமைச்சருடையது என்பதற்காக என்று நான் சொல்லவில்லை. தரமறிந்து பாராட்ட வேண்டிய அறிவாற்றல் மிக்கவர்கள், தம்போலும் தரமிக்கவுள்ளாரின் எழுத்தாக்கங்கள் மூலையிலே தூக்கி எறியப்பட்டுக் கிடக்கும்போது, அமைச்சர்கள் ஆக்கியவை என்ற ஒரே தரத்தைத் தவிர, வேறெந்தத் தரமோ உயர்வோ இல்லாதவற்றை அந்த அமைச்சர்களுக்காக வேண்டிப் போற்றிப் புகழ்கின்றார்களே என்றுதான் நான் வருந்துகிறேன்".

"இதற்காக யார் மீதும் நொந்துகொண்டோ, குற்றஞ்சாட்டியோ பயன் இல்லை. வெளியீட்டாளர்களுக்குத் தேவை மண்ணாங்கட்டியாக இருந்தாலும் அது விற்பனையாக வேண்டியது;— அவர்கள்

போட்ட முதலுக்கு நல்ல இலாபம் காணவேண்டியது. ஆகவே, அமைச்சுச் செல்வாக்கை வைத்து அவர்களின் படைப்புகளை — மண்ணுங்கட்டிகளை—எளிதில் விற்றுவிடலாம்! எனவேதான் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிருர்கள் அவற்றை வெளியிடுவதற்கு.

பாராட்டுகின்ற கலைஞர்களையோ, மொழித்துறை வல்லுநர்களையோ நாம் குற்றம் சொல்லவேண்டாம். பாவம் அப்படிப்பட்ட இக்கட்டான கட்டங்களில் எப்படியோ அவர்கள் தம்மையறியாமல் மாட்டிக்கொண்டு விடுகிருர்கள்".

அப்போது கடிகாரத்தைப் பார்த்தேன் நான். நேரம் அதிகமாயிருந்தது. "அடடே நீங்கள் வந்ததைப் பற்றி ஒன்றுமே கேட்காமல் வேறு எதை எதையோ வெகுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டோமே! உங்கள் செய்தி எனக்கு ஒன்றுமே பிடிபடவில்லை. நான் எழுதிய கதையில் உங்களைப்பற்றி ஏதாவது தவருக...எழுதியிருந்தால், தயவு செய்து பொறுத்துக்கொள்ளுங்கள்!"

"செச்சே! அப்படியொன்றுமில்லை. என்னைப்பற்றி உங்களிடம் விவரமாகச் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் இப்போது வந்துள்ளேன்.

"என்னுடைய போக்குகள் மாறியதற்குக் காரணம், இதோ என்னுடைய தந்தையாரின் இந்த நாட்குறிப்புக்கள் தாம். ஒரு மாதத்துக்கு முன்னர்தான் இதைப் படித்தேன் என்று சொன்னேனல்லவா! அதன் பிறகு நான் ஆற்றிய தொழிலில் மேலும் தொடர்ந்திருக்க எனக்கு விருப்பமில்லாமற் போய்விட்டது. நான் உடுத்தி வந்த உடையைப் பார்க்கும்போதெல்லாம் என் மன உளைச்சல் பெருகிக்கொண்டு போயிற்று. எந்தக் கதர் உடையை என் தந்தையார் புனிதமானதெனக் கருதித் தாமே நூற்ற நூலால் அந்த உடையைத் தயார் செய்து, அவர் அணிந்து, அதன் மூலம் சிறப்பு மிக்க தம்முடைய தொண்டின் பெருமையைக் காட்டி உலவி வந்தாரோ, ஊழியம் புரிந்து வந்தாரோ, அதே கதர் உடையை நான் அலுவல் பெறுவதற்காக — கேவலம் வயிற்றுப் பாட்டுக்காக—உடுத்திக் கொண்டு இவ்வளவு நாள் வதிந்து வந்ததை எண்ணிப் பார்த்தபோது அவமானம் தாள முடியவில்லை எனக்கு. என் தந்தையாரின் கொள்கைக்கும் கோட்பாட்டுக்கும் நானே எதிரியாக இயங்குவதா? உடனே அந்த உடையைக் களைந்தெறிந்தேன். மேல் அலுவலர்களுக்கு என் விலகல் கடிதத்தையும் அனுப்பினேன்.

"என் விலகலை மேல் அலுவலர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தார்கள். என்னுடைய வேலைகள் மிகவும் சிறப்பாக இருப்பதாகவும், மற்றவர்களுக்கெல்லாம் என் செயல்முறைகள் நல்ல எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டியாகவும் விளங்குவதாகவும்—அந்த நிலையில் என் விலகலை அவர்கள் ஏற்கமுடியாது என்றும் அடித்துக்கூறி என் விலகல் கடிதத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

"அவர்களின் மறுப்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது. இவ்வளவு சலுகை நிறைந்த ஒரு அலுவலை ஏன் விட்டுவிட வேண்டும் என்று கூட எண்ணினேன். ஆனல், என் கண் முன்னுல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஊழல்கள், என்னைப்போன்ற மற்ற ஊழியர்கள் நடந்துகொள்ளும் முறைகள் இவை எல்லாம் சேர்ந்து என்னை நாணத்தால் தலை குனியச் செய்தன. கண்டிக்க வேண்டிய ஒன்றைக் கண்டிக்காமல் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்பதே தவறு. அப்படிப்பட்ட நிலையில் அந்தக் கண்டிக்க வேண்டிய செயலில் ஈடுபட்டிருப்போரோடு நாமும் கூட்டுச்சேர்ந்து கொண்டிருப்பது எவ்வளவு பெரிய தவறு! அடிக்கடி என் தந்தையார் என் மனக் கண்ணில் வந்துநின்ருர். "பற்றற்ற தொண்டு புரிபவர்களே அறஞ் செய்கிருர்கள். அந்த அறத்தின் பாற்பட்டதே இன்பம்" என்று என் தந்தையார் என்னிடம் வந்து வந்து சொல்லிக்கொண்டு நிற்பது போல் தோன்றிற்று எனக்கு. "அறமோ, தொண்டோ புரிவதற்கு வாய்ப்பில்லை, முடியவில்லை என்ருல் பரவாயில்லை. அவற்றிற்கு எதிரான எதையும் செய்யாதே! அறத்துக்கு முரணுக நடந்துகொள்ளாமலிருப்பதே ஒரு அறந்தான்" என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

"இந்த நிலையில் மாநில மட்ட அலுவற் பேராளர் ஒருவர் என்னை வந்து பார்த்தார் நாலைந்து முறைகள். அவர் வந்தது திரும்பவும் என்னை வேலையை ஒப்புக்கொள்ளும்படி சொல்லுவதற்காகத்தான்.

"அவர் என்னை வந்து பார்த்ததை வைத்துக்கொண்டுதான் கதை கட்டி விட்டார்கள். 'யாரோ எப்படியோஎண்ணிக்கொண்டு போகட்டும், சொல்லிக்கொண்டு போகட்டும்; கதை கட்டிக்கொண்டு போகட்டும். பனைமரத் தடியில் போய் நிற்பவர்கள் எல்லாம் மது அருந்தவா போய் நிற்கிருர்கள்! அப்படிச் சிலர் நினைத்துக் கொண்டால் அது நிற்பவர்களின் தவறு!' என்று என்னை நான் தேற்றிக்கொண்டு அந்த அலுவல் பற்றிய முடிவை ஒரு வகையாகத் தீர்த்துக்கொண்டு மற்றவற்றைக் கவனிக்கலாம் என்றிருந்தேன்.

"அந்த நிலையில்தான் ஊர்திக்காக ஒருநாள் சாலையில் வந்து நின்றேன் — என்னை வந்து சந்தித்த அந்த அலுவலரோடு ஊர்தி வந்தது. அதில் இடமிருப்பது தெரிந்தது.கை காட்டினேன். ஊர்தி நிறுத்தப்படவில்லை. அப்போதுதான் உண்மையான உள்ளத் துணுக்கம் எனக்கேற்பட்டது. அன்று அவசரமாகச் சென்னைக்கு வேறு போகவேண்டியிருந்தது—அதே அலுவல் காரணமாக. உடனே வந்து இவர்களைக் காணவோ, நிலைமைகளை விளக்கவோ எனக்குச் சமயம் இல்லை. சென்னைக்குப் போய்விட்டேன். இரண்டு நாட்கள் கழித்து இங்கு வந்தால்............"

ஐயை சற்றே நிறுத்தினுள்.அவள் கூறியவை என்னை வியப்பிலாழ்த்தவில்லை. அதற்கு மேற்பட்ட ஒன்றிற் கொண்டுபோய் என்னைத் தலைகுப்புறத் தள்ளியது. மேலே தொடர்ந்தாள் ஐயை.

"எல்லாம் பெரு மாறுதலுக்குள்ளாகி, என்னைப் பரிதவிக்கச் செய்தது. என் உயிர் என்னிடத்தில் இல்லை. சரியாக ஐந்து நாட்களுக்குப் பின்னர்தான் இவர் கண் விழித்துப் பார்த்தார்! என்ன இருந்தாலும் இப்படி ஓடுகின்ற ஊர்தியிலிருந்தா குதிப்பது! அப்பா! அதை நினைத்தாலே எனக்குப் பயமாக இருக்கிறதே!

"நீங்கள் நினைத்தாலே பயப்படும் செய்தியை, அவர் உங்களுக்காகச் செயலிலே செய்து காட்டிவிட்டார்" என்று கூறிக்கொண்டு பக்கத்திலிருந்த ஆசாமியைக் — கழுகுமலையைத்தான்—பார்த்தேன். அவன் நாணத்தால் தலை கவிழ்ந்துகொண்டான்.

சற்று நேரம் அமைதி நிலவியது. இந்த அமைதிதான் இனிமையின் எழில் நிறைந்த அமைதி. என்ருலும் இன்னும் என்ஞல் நன்ருக மூச்சுவிட முடியவில்லே. 'எவ்வளவு அவசரப்பட்டு மற்றவர்களின் கூற்றை வைத்துக்கொண்டே ஒரு செய்தியை முடிவு கட்டிவிட்டேன். முடிவுகட்டிவிட்டதோடுஅமையாமல், சம்பந்தப் பட்டவர்கள் பற்றி—சீரிய பெற்றி உடையவர்கள் பற்றி — மாருன கதையொன்றும் எழுதிவிட்டேனே' என்ற எண்ணந்தான் என்னே நன்ருக மூச்சுவிட வொண்ணுதபடி தடுத்தது.

"இப்போது நான் வந்திருப்பது எதற்குத் தெரியுமா?" என்று திடீரென்று ஒரு கேள்வியைப் போட்டாள் ஐயை. அந்தக் கேள்வி அவளிடமிருந்து நான் பலமுறை துணுக்கத்தோடு எதிர்பார்த்த கேள்வியல்லவா! இப்போது அந்தக் கேள்வியைப் போட்டுவிட்டாள். மறுபடியும் துணுக்கம் வந்து என்னே மூச்சு முட்டவைத்தது.

"ஊர்ப் பயணம் போகும் ஊர்தியிலிருந்தே இவர் திடீர் என்று குதிக்கிருர். இப்படிப் பட்டவரை நம்பி நான் எப்படி உலகத்தில் வாழ்க்கைப் பயணம் நடத்துவது? அதனுல்..."

"ஏன், இவர் உலகத்திலிருந்தே சந்திரமண்டலத்தை நோக்கிக் குதித்துவிடுவார் என்று பயப்படுகிறீர்களா?" என்று நான் இடைமறித்துக் கேட்டேன். எனக்கு அவள் தொடர்ந்து கேட்ட கேள்வி வேறு கேள்வியாக இருந்ததால் சற்றுத் தென்பை உண்டாக்கியது.

"அப்படிக் குதித்தாலும் குதித்துவிடுவார் ராக்கெட் இல்லாமல் குதிக்க முடியுமானுல் — அதுதான், இவரை உங்களிடம் கொண்டுவந்து ஒப்படைத்து விட்டு, சந்திரமண்டலத்தை நோக்கியோ, தார்ச்சாலேயை நோக்கியோ குதிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, நான் எங்காவது கண்காணுத இடத்திற்குப் போய்விடலாமென்று வந்திருக்கிறேன்!"

"அவ்வளவு எளிதிலா விரக்தி வந்துவிட்டது?" என்று கேட்டுவிட்டு நான் உரக்கச் சிரித்தேன். அவர்களும் என்னேடு சிரிப்பிற் கலந்துகொண்டார்கள்.

"சரி, எப்போது......?"

"திருமணம் தானே! உங்களேக் கேட்காமலா எங்கள் திருமணத்தை நாங்கள் நடத்துவோம். பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போகிரேம். பத்துப்பேர் முன்னிலேயில் மாலே மாற்றிக் கொள்ளப் போகிரேம். அந்தப் பத்துப் பேரில் தலேயாயவர் — முதன்மையானவர் நீங்கள்"

"மெத்த மகிழ்ச்சி! மெத்த மகிழ்ச்சி!"

"அப்புறம் மலேவாசத்திற்குப் போகப் போகிரேம்!"

"மலே வாசத்திற்கா? — ஓகோ, தேனிலவுக்கா?"

"ஆமாம், தேனிலவிற்கு! — நாட்டின் நலிவால் அலேந்து திரியும் எண்ணிறந்த இளஞ்சிருர்களில்— எங்களால் முடிந்த அளவில் சிலரைக் கொண்டு வந்து, அவர்களுக்கு உண்டியும், உடையும் உறையுளும் அளித்துக், கல்வி புகட்டி அதன் மூலம் அந்தச் சிருர்கள் நகைமுகம் காட்டப் பார்த்து, அந்த நகைப் பிலே இன் சுவையாய் ஒளி வீசும் தேனிலாவைப் பார்த்து அனுபவிப்பதற்கு."

"நீங்கள் சொல்வது புரியவில்லேயே! அதற்கேன் மலேவாசம் போகவேண்டும்? அதோடு உங்கள் திட்டத்திற்கு நிறையப் பணம் வேண்டுமே!"

"விளங்கச் சொல்கிறேன் கேளுங்கள்:

"எங்கள் இருவருக்கும் பொது நண்பர் ஒருவர் நீண்டகாலமாக ஒரு திட்டம் போட்டுக்கொண்டிருந்தார். அனுதைப் பள்ளியொன்று நடத்த வேண்டும்; அந்தப் பள்ளியைக் கிராம சூழ்நிலேயில் நடத்தவேண்டும் என்று. அதற்குத் தக்கவர்களின் ஒத்தாசை வேண்டும். பணமும் தேவை. வசதியான இடமும் தேவை. நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்போது இடத்தைக்கண்டுபிடித்து விட்டார். பணமும் ஓரளவு சேர்த்திருக்கிருர். நாங்களும் அவருக்கு ஒத்தாசையாகச் செயற்பட இப்போது முடிவுசெய்துவிட்டோம்!"

"ஆமாம், பொது நண்பர் என்று சொன்னீர்களே, நீங்கள் இருவரும் நீண்ட நாளாகவே ஒருவரையொருவர் அறிந்திருக்கிறீர்களா?"

"இல்லே, நாங்கள் இருவரும் கடந்து ஓராண்டுகாலமாகத்தான் ஒருவரையொருவர் அறிந்துகொண்டோம். ஆனுல் அந்த நண்பர் எங்கள் இருவருக்கும் பொதுவில் தெரியாமலே நீண்ட நாட்கள் நண்பராயிருக்கிருர். எனக்கு, அவர் என் தந்தையார் இருந்தபோதே,—அவர் மூலமாக அறிமுகமானவர். இவருக்கு அவர் கல்லூரியில் அறிமுகமானுராம்!"

"என்ன, கல்லூரியிலா?"

"ஆமாம், படிப்பு முடிந்த பிறகு சிறிது காலம் இவர் டியூட்டராயிருந்தாராம். அந்தச் சமயம் அந்த நண்பரின் அறிமுகம் ஏற்பட்டதாம்!"

"ஆமாம், கல்லூரி டியூட்டராக இருந்துவிட்டு எப்படிப் பஸ் கண்டக்டராக மாறினுர் கழுகுமலே?"

"கல்லூரி டியூட்டரோ, கண்டக்டரோ அலுவல் என்ற முறையில் இரண்டும் ஒன்றுதான் என்பது அவர் உள்ளக்கிடக்கை. டியூட்டராய் இருந்த சமயம் கல்லூரி முதல்வருக்கும் இவருக்கும் ஏதோ தகராரும். அந்தத் தகராறு காரணமாக இவர்வேலேயைவிட்டு வந்துவிட்டார். வீட்டில் சில காலம் சும்மாயிருந்திருக்கிருர். அப்போது பல அலுவல்களுக்கு இவர் மனுப்போட்டார். அப்படிப்போட்டதில் இந்தப் பஸ் கண்டக்டர் வேலேயும் ஒன்று. எந்த வேலே வந்ததோ அந்த வேலேயை ஏற்றுக்கொண்டார். இவர் பெயர் கூட......"

"கழுகுமலேதானே!"

"இல்லே, இவர் பஸ் கண்டக்டரானபோது இவருடைய நண்பர்கள் எல்லாம் சேர்ந்து வைத்த பெயர் அது. இவருடைய பெயர்......"

"வென்று வந்தான்" என்று நாலாவது குரல் ஒன்று கேட்டது. வாயிலேத் தாண்டி ஊர்தியோட்டி வந்துகொண்டிருந்தார்.

"வென்று வந்தான், வென்று வந்தான் என்ருல் யாரை வென்று வந்தான்? என்று எல்லாரும் கேட்கத் தொடங்கினுர்கள். அதனுல் நான்தான் முதன் முதலில் கழுகுமலே என்று பெயரிட்டு அழைத்தேன்!" என்று அந்த ஊர்தி ஓட்டி பின்னும் கூறினுர்.

"இனிக் கழுகுமலே வேண்டாம்! வென்றுவந்தான் என்றே கூப்பிடுங்கள். யாரை வென்றுவந்தான் என்று யாராவது கேட்டால், ஐயையை வென்றுவந்தான் என்று அடித்துச் சொல்லுங்கள்." என்று

ஐந்தாவது குரல் ஒன்று கேட்டது. அங்கே அனாதைப்பள்ளி நடத்தப் போகும் அந்தப் பொது நண்பர் வந்துகொண்டிருந்தார்.

எல்லாரும் கொல் என்று சிரித்தோம். அந்த ஊர்தியோட்டியின் சிரிப்புத்தான் அளவுமீறி நின்றது. அந்தக் கபடமற்ற சிரிப்புத்தான் என்னை அளவுமீறிக் கவர்ந்தது. மூன்றாவது மனிதன் அன்று அடைந்த துன்பத்தைக் கண்டு அவர் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றநிலை, இன்று அதே மூன்றாவது மனிதன் அடைந்த வெற்றி கண்டு மகிழ்கின்ற மகிழ்ச்சி! என்னே, என்னே! மாசு மருவற்ற குழந்தையுள்ளம், அதே பெற்றியில் வளர்ச்சி கண்டபின்னர் இப்படித்தான் இருக்குமோ! உலகிலுள்ள எல்லா உள்ளங்களும் இந்த அரிய பெற்றியைக் கொண்டுவிட்டவையானால், பூசல் ஏது? பகைமை ஏது? வன்பு ஏது? பொறாமையேது? பட்டினி, இல்லாமை, நல்ல செயல் ஒன்றைச் செய்யமுடியாமை என்பனவெல்லாம் எங்கே இருக்கப் போகின்றன?

சிறிது நேரம் பொறுத்து நான் அந்தப் பொது நண்பரைக் கேட்டேன்: "மலைவாசம் செய்யப்போகிறீர்களாமே, அது எங்கே?"

"மலைவாசம் செய்யப்போகிறார்களா! பெரிய பொறுப்பைச் சுமக்கப் போகிறார்கள். ஏலகிரிமலை கேள்விப்பட்டிருப்பீர்களே, அங்கே மலைஉச்சிக்கு இப்போது தான்சாலை கூட அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மலை உச்சியில் இவர்கள் அனாதைப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்த ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அங்கே சில நிலங்கள் வாங்கி இவர்களே பயிரிடப்போகிறார்கள்—அந்தத் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றாற்போல் வளரக்கூடிய பயிர்களை. இவர்களுக்கும், இவர்கள் பயிற்சியளிக்கப்போகும் அனாதைச் சிறுவர்களுக்கும் அந்த நிலங்களின் விளைவுதான் ஊதியமாகப் பயன்படவேண்டும்! அதன் விளைவு, அவற்றின்விளைவு, எல்லாவற்றின்விளைவும் எப்படியிருக்கும் என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்! மொத்தத்தில் சிரமமானவேலை, பொறுப்புமிக்கது, குடும்பத்தோடு நடத்துகின்ற துறவு வாழ்க்கை. அங்கே நவீன வசதிகள் ஏதும் கிடைக்காது. இயற்கை வனப்பை மட்டும் கண்டு களிக்கலாம்."

"அதைப் பணியாக ஏற்றுக் கொண்டவர்களுக்குச் சிரமம் தெரியாது. சிரமம் ஒன்றும் இராது!" என்றேன் நான்.

"சரி, போய் வருகிறோம். விரைவில் சந்திப்போம்!" என்று ஐயையும், வென்று வந்தானும் என்னிடம் விடைபெற்றனர்.

"நீங்கள் ஏற்றதே தொண்டு!" என்று கூறி, அவர்களை வாழ்த்தி வழியனுப்பினேன். மற்றவர்களும் விடைபெற்றுக்கொண்டனர்.

அவர்கள் என் பார்வையிலிருந்து மறையும்வரை அவர்களை நோக்கிக் கொண்டிருந்தேன் நான். 'ஐயை, நீ ஏற்றதே தொண்டு! வென்றுவந்தான், நீ ஏற்றதே தொண்டு' என்று என்னையறியாமல் என் உள்மனம் சொல்லிக்கொண்டேயிருந்தது.

(முற்றும்)

****

4-ம் பக்கத் தொடர்ச்சி

பெரும் கள்ளர்களையும் குறிப்பிடுகின்றன. மக்கள் நலனுக்காக மக்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் அரசு. நாட்டின் நலன் கருதிப் போடப்படும் சிலபல திட்டங்களுக்கெல்லாம் செலவு செய்திடவும், குடிகளைப் போற்றிடவும், வாழ்வுக்குரிய வகைச் செயல்கள் அத்தனையும் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற்றிட வரி போடுவது அவசியம் தான்! வரியின்றி எந்த அரசும், எந்த நாடும் ஆள முடியாததுதான். வரிகளின்றி வருமானம் எதுவும் ஏற்படுவதில்லைதான்! வரி விதித்து மக்களிடமிருந்து அதனை முறைப்படி வசூலித்துத்தான் நாடாள்வோர் ஆள முடியும். நாடு வாழ முடியும்... உண்மைதான்! ஆனால், எந்த அளவுக்கு?...எந்த ஒரு சாமானிய குடிமகனும் தனக்கு விதிக்கப்பட்டுள்ள வரி ஒரு சுமை, ஒரு செலவு, என்று நொந்துபோகாத அளவுக்கு! பாமரனுக்கு வரியென்பது தன் வருமானத்தில்தான் செலுத்தக்கூடிய அளவுக்குள் இருக்கும் முறையோடு தான் அமையவேண்டும்...... அப்போதுதான் இது கடும்புலி வாழும் காடு அல்ல, என்ற எண்ணம் ஏற்பட முடியும். ஏழை வயிறு காய்ந்து கொண்டிருக்க, எட்டடுக்கு மாளிகைக்குத் திட்டம் போடும் அரசாக அமைந்தால் இது நாடு அல்ல, காடு என்ற உணர்வுதான் மேலோங்கும்.

எங்களுக்கு அறிவுரை கூறுமுன், கொஞ்சம் விலைவாசி ஏற்றத்தைப் பாருங்களேன்! பணவீக்கம் எங்ஙனம் ஏற்பட்டது என்பதை அலசுங்களேன்! இருக்கும் வரிகளைக் குறைக்காவிட்டாலும், புது வரிகளாவது பிறக்காமலிருக்க வழி வகையினைத் தேடுங்களேன். மத்திய அரசைக் கொஞ்சம் பலமாகத் தட்டிக் கேளுங்களேன். காந்தியடிகளின் பெயரால் நாட்டையாள வந்துள்ளவர்கள் இனியேனும் கண் விழித்துக் கடமையினைச் செய்வார்களா? இனியேனும் வரிக்கொடுமை நீங்குமா? விலைவாசி இறங்குமா? பாலிற் கலப்படம், எண்ணெயிற் கடப்படம், எதிலுமே கலப்படம் என்ற நிலை மாறுமா, மாற்றப்படுமா? நாடு அல்ல காடு இது என்று சலசலப்பு வளரும் முன்னே, மற்றவர்கள் இதனைச் சர்வாதிகாரம் என்று சொல்லுமுன்னே, வாழும் வகை பிறக்குமா? நாடு வளரும் நிலை பிறக்குமா?

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.